# பூச்செண்டு

சப்டம்பர் 1969

30 காசு



www.thamizham.net - Free E Books No TM 14719

# மாணவர்களே!

**தரத்தில் உயர்ந்த விலை சகாயமான,**

**சரளமாக எழுதக் கூடிய**

# ஆஸ்வால்

பவுண்டன் பேனுக்கள், பால் பாயின்ட் பேனுக்கள் ரிஃபில்களையே வாங்குங்கள். இவை ஈடு இணை யற்றவை. ரனுஸால் சேர்ந்த ஆஸ்வால் இங்கையும் வாங்குங்கள்.

—:o:—

## ஆஸ்வால் பென் கம்பெனி

331–333, தம்பு செட்டி தெரு, சென்னை-1


www.thamizham.net - Free E Books No TM 14719

தமிழக அளவில் மாணவர்களால், மாணவர்களுக்காக நடத்தப்படும் ஒரே இலட்சியத் திங்களிதழ்.

# "பூச்செண்டு"

தனிப்பிரதி: 30 காசு ஆண்டு சந்தா: ரூ. 4/-

செண்டு: 2 செப்டம்பர் 1969 பூ: 5

உள்ளே இருப்பவை......


○ உப்புப் போட்ட பாலைக் குடித்த மாணவி...ராகிங் ஒரு சுவையான அனுபவம் —10

○ சந்திரனுக்குப் போனாலும் போனார்கள்! —12

○ இந்தியாவில் 100% படித்தவர்கள் என்ற நிலை வந்து விட்டால்......? (கற்பனைக்கூடம்) —18

○ ஆணும் பெண்ணும் சேர்ந்துப் படிக்கலாமா? இது ஒரு பேட்டி —17

○ தூத்துக்குடிக்குத் திமிங்கலம் வந்தது —19

○ இளமையை இழந்து விடாதே —22

○ பிரட்டோ சுண்டல்! —33

○ அறியாயோ! (கவிதை) —39

○ தென்றல் வீசும் (நிழற்படத் தொடர்கதை) —40

○ மாணவர் பங்கு என்ன? —47


www.thamizham.net - Free E Books No TM 14719

# அன்புள்ள ஆசிரியருக்கு—

முழுக்க முழுக்கப் பூச்செண்டு ஒரு குழந்தை அது மழலை பேசுகின்றது. அனைவரையும் மகிழ்விக்கிறது. அம் மழலைச் சிறு குழந்தை, என்னதான் தவறுகள் செய்தாலும் அதை வாயால் சொல்லித் திருத்துவது இயல்பே தவிர அடித்துத் திருத்துவது என்பது நற்செயலல்ல. பூச்செண்டில் குறை நேர்ந்தால் சுட்டிக் காட்டி, நிறைவு நேர்ந்தால் போற்றி வளர்த்துத் துணை புரிவோம்.

**த. இராம் மோகன். சமணக்கல்லூரி.**

சென்ற இதழில் கல்பனா அவர்கள் எழுதிய 'மகனே நீ வாழ்க' விமர்சனம் படித்தேன். ஒரு சினிமா விமர்சனம் எழுதத் தெரிந்தால் எழுதட்டும் இல்லையேல் அந்த பகுதியை அகற்றிவிடவும். \ஒரு நல்ல படத்தை கெடுப்பதுடன், ஒரு நல்ல இதழ் என்பதையும் கெடுத்துக் கொள்ளாதீர்

**எஸ். எஸ். ஜெய்சுதர்சன், ஜெய்சங்கர் ரசிகர் மன்றம், மதுரை-1.**

ஆகஸ்டு இதழில் மாணவ மாணவிகளின் போட்டிகள் அருமை. தொடர்ந்து அம்மாதிரி பகுதிகள் பூச்செண்டில் இடம் பெறவேண்டும் மாணவர்கள் மனதில் இருப்பதை மாணவிகளும். மாணவிகள் உள்ளத்தில் இருப்பதை மாணவர்களும் நன்கு புரிந்து கொண்டால் ஒருவரைப் பற்றி மற்றொருவர் கொண்ட தவறான கருத்துக்கள் விலகி விடும். சகோதர பாசம் பெருகி விடும்.

**இல. பிரசன்ன வேங்கடேசன், சேலம்-9.**

'பூவையொத்தவர் பூவையரென்பதால் பூத்தலையொத்தது மண வாழ்வு என்னும் கருத்தை ஏற்க பெண்கள் 20ம் நூற்றாண்டில் நிறைய பேர் முன் வருவார்களா என்பது சந்தேகமே!

**பரதன், மதுரை-11.**

மகளிர் இதழ் அட்டைப் படத்தை எடுத்தவர் யார் என்பதை ஆசிரியர் மறந்தது ஏனோ?

**எஸ் இரவி பெங்களூர்.**

மன்னிக்கவும்— புகைப்படத் துறையில் மிக்க ஆர்வமும், பூச்செண்டின் பால் ஆதரவும் காட்டும் அந்த இளைஞர் பல தலைசிறந்த பத்திரிகைகளுக்குப் புகைப்படம் எடுத்தவர். முகவரி;— யோகானந், சினி ஸ்டூடியோ, சென்னை-17.

---


SERVING

MAN'S NEED FOR KNOWLEDGE,

We Stock and sell books,

on all subjects

COLLEGE & TECHNICAL

CONTACT

**VISWANATH & CO.,**

BOOK SELLERS

31, Ranganathan St. T. Nagar, Madras-17 Phone : 440278

N. B: Mofussil orders accompanied by advance of 25% attended to promptly.


---

www.thamizham.net - Free E Books No TM 14719

எல்லா விவரங்களுக்கும் தொடர்பு கொள்ளும் ஒரே முகவரி : (தனிப் பட்ட பெயர்களுக்கு எழுத வேண்டாம்.)

ஆசிரியர் குழு,
"பூச்செண்டு"
19, நௌரோசி வீதி,
சென்னை-31.

## ஆசிரியர் குழு

[பதிப்பாசிரியர் : பேராசிரியர். திரு சு. இராசேந்திரன், எம். ஏ.]

திரு இ. ஜே. சுந்தர் (I. எம். ஏ) பச்சையப்பன் கல்லூரி

திரு. வில்லியம் பெர்னாண்டஸ், சி. டி. (ஏ. எம். ஐ. இ.)

திரு. ஈ. எஸ். மெர்வின் (III பி. ஏ.) கிறித்துவக் கல்லூரி

திரு. த. ஆ. செயவேலன் (IV. எம்.பி. பி.எஸ்) சென்னை மருத்துவக் கல்லூரி

திரு. அ. மா. சீ. செயினுல்லாபுதீன் (III பி.ஏ,) பச்சையப்பன் கல்லூரி

ஓவியக் குழுத் தலைவர் : திரு. துளசிதாஸ் (IV பி.இ.) பொறியியற் கல்லூரி சென்னை.

## செயற் குழு உறுப்பினர்கள் :

**சென்னை**

திரு. சனார்த்தனம் (iii பி. ஏ.) இலயோலா கல்லூரி

திரு. இ. துரைசாமி (iii எம். பி., பி.எஸ்.) ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி

திரு. இரா. இராதா கிருட்டிணன், (ii எம். பி., பி.எஸ்.) ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி

திரு. எம். எஸ். இராமச்சந்திரன் (ii பி. ஏ) கிறித்துவக் கல்லூரி

திரு. அர. கல்யாணராமன் (iii பி.ஏ) விவேகானந்தா கல்லூரி

திரு. ந. தி. சடாச்சரம் (iii பி. ஏ.) அரசினர் கலைக்கல்லூரி

திரு த. இராம் மோகன் (ii பி எஸ்ஸி.) சமணக் கல்லூரி

திரு. சி. சுப்பிரமணியன் (ii எல்.எம்இ. இராம கிருஷ்ண மிஷின் தொழிற் கல்வி நிலையம்

**மதுரை**

திரு. வி. வே. மாலன் (ii இள. மருந்தாக்கியல்) மதுரை மருத்துவக் கல்லூரி

திரு. வீ. செ. அன்பழகன் (iii இள மருந்தாக்கியல்) மதுரை மருத்துவக் கல்லூரி

திரு. கா. பரதன், (ii பி. காம்) மதுரைக் கல்லூரி

திரு. சிவ சூரியன் (ii பி.ஏ.) மதுரைக் கல்லூரி

திரு. வி. பழனியப்பன், (iii பி. ஏ) தியாகராசர் கல்லூரி

திரு. இராம. அங்கணன் (ii பி. ஏ.) அமெரிக்கன் கல்லூரி

**திருச்சி**

திரு. பொ. இரத்தினம் (iii பி. காம்) தேசியக் கல்லூரி

www.thamizham.net - Free E Books No TM 14719

திரு. இளங்கோ. ஆ இரா (ii பி. எஸ்ஸி) பெரியார் கல்லூரி

திரு. க. செல்லப்பன் (ii பி. எஸ்ஸி), புனித சூசையப்பர் கல்லூரி,

திரு. செ. மாணிக்கம் (iii பி. எஸ்ஸி) பெரியார் கல்லூரி

திரு. அ. சாகுல் அமீது, (iii பி. எஸ்.ஸி) ஜமால் முகம்மது கல்லூரி

திரு. பால்ராஜ் (ii பி. எ. தேசியக் கல்லூரி

**திருநெல்வேலி**

திரு. பா. முத்துசாமி (ii பி.ஏ.) தூய சவேரியார் கல்லூரி,

திரு. அ. ஹரிஹர சுப்பிரமணியன் (iii பி. எஸ்.ஸி) இந்துக் கல்லூரி.

திரு. ந. ஆறுமுகம் (iii பி எஸ் ஸி) இந்துக் கல்லூரி,

**தூத்துக்குடி :**

திரு. வே. இராமணன் (iii பி. காம்) வ. உ. சி. கல்லூரி.

திரு இரா.அன்டோ மச்சாது (iiiபி.ஏ.) வ.உ.சி. கல்லூரி,

**பிற இடங்கள் :**

திரு. ராஜாராம் (iii பி.ஏ.) தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்.

திரு. சு. ரவி (iii பி. இ.) அரசினர் பொறியியற்கல்லூரி, சேலம்.

திரு. கணேசன் (i பி. காம்). அழகப்பர் கல்லூரி காரைக்குடி,

திரு. ஆர். மாதையன் (முன்னிலை) கந்தசாமி கவுண்டர் கல்லூரி, வேலூர். சேலம்

திரு. இரா. குமணன் (iii பி.ஏ) அண்ணமலைப் பல்கலைக் கழகம்.

திரு. பழ. சிங்காரவேலு (i பி.ஏ.) பச்சையப்பன் கல்லூரி காஞ்சி.

திரு. தேவ குமார். (iii பி எஸ் ஸி) மகாலிங்கம் கல்லூரி. பொள்ளாச்சி

திரு. இருதயதாசன் (iii பிஎ.ஸ் ஸி) இந்துக் கல்லூரி, நாகர் கோயில்.

ப. தமிழினியன், புலவர் நிறைநிலை திருவையாறு

**மகளிர் :**

செல்வி. ஆனந்தி (ii பி எஸ் ஸி) எஸ். இ. டி. கல்லூரி, சென்னை

செல்வி. கருப்பாயி (iiiபி.ஏ) மீனாட்சி கல்லூரி, மதுரை

செல்வி. அருணா (i பி.ஏ.) அரசினர் மகளிர் கல்லூரி, சென்னை

**இலங்கை :**

செல்வி இராதா (இளங்கலை) மகளிர் கல்லூரி, கொழும்பு

**செயற்குழு தோழர்களே !**

பூச்செண்டின் மணத்தை நுகராத பல நூறு மாணவர்கள், இளைஞர்கள் இருக்கும் வரை நமக்கு வெற்றியில்லை. இந்த ஆக்கப் பணியை தமிழகமெங்கும் பறைசாற்ற நாமெல்லாம் ஒரே குடும்பமாகத் திரண்டு நின்று உழைத்திடுவோம்! சந்தாவும் விளம்பரமும் பெற்றிடுவோம்.

---

**உறுப்பினர்கள் இல்லாத கல்லூரிகளில் ஆர்வமுள்ள மாணவர்களைத் தொடர்ந்து அழைக்கிறோம்.**

www.thamizham.net - Free E Books No TM 14719



# நிலைமை நீடித்தால்...!

மாதம் ஆகஸ்டு- எந்த மாதத்தில் நமக்கெல்லாம் தன்னுரிமை கிட்டிட்டென்று மகிழ்ச்சியால் ஆர்பரிக்கின்றோமோ அந்தமாதத்தில் தான் சில வேண்டப்படாத- எண்ணவே மனம் கூசுகின்ற நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன, என்பதை எண்ணும் போது மாணவ உலகம் இந்த நிலைமைக்கு ஆகிவிட்டதா என்று வேதனைப் படுகிறோம். எந்த உணர்ச்சியோடு – எந்த வேகத்தோடு - எண்ணத்தோடு இந்த நிகழ்வினைகள் நடந்திருந்தாலும், தவறு தவறுதான்! சில கல்லூரி மாணவ நண்பர்களுக்கும் பஸ் தொழிலாளர்களுக்கும் நடந்த நிகழ்ச்சிகளைத்தான் இங்கு குறிப்பிடுகின்றோம். பல் உடையும் அளவிற்கு- மரணம் உண்டாகும் அளவிற்கு மாணவர்கள் நடந்திருக்கின்றார்கள் என்றால் எந்த உள்ளம் தான் வேதனைப் படாமல் இருக்க முடியும்!- படிப்பவர்கள் பொதுமக்களுக்கு வழிகாட்டிகளாக இருக்க வேண்டுமென்று தான் சமுதாயம் விரும்புகின்றது. அதை விடுத்து சமுதாயத்திற்கு வேதனையும் வெறுப்பும் தரும் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டேயிருந்தால்...!

இரு தரப்பினருமே சிந்திக்க வேண்டிய நேரம் இது. இருதரப்பிலும் குற்றம் இருப்பதை ஒத்துக் கொள்கின்றோம். ஊர்திகளில் 'கண்டக்டர்கள்' நடந்து கொள்ளும் மோசமான விதம்- அவர்களில் ஒருசிலரின் கடுகடுத்த பேச்சு- எதற்கும் அஞ்சாதவர்கள் போல் நடக்கும் விதம்- பஸ்ஸில் ஏறுமுன் 'விசில்' கொடுத்தல், மாணவர்கள் முன்னால் மாணவிகளிடம் கீழ்த்தரமாக நடந்து கொள்ளும் முறை போன்ற நடவடிக்கைகள் உள்ளத்தில் வெறுப்பை உண்டாக்கி வேதனையான நிகழ்ச்சிகள் நடைபெறக் காரணமாகிவிடுன்றனகி.


www.thamizham.net - Free E Books No TM 14719

இந்த நிகழ்ச்சிகள் நடைபெறக் காரணம் மாணவர்களா? மாணவர்கள் என்றால் யார்?– ஒருசிலர் தம்மனப் போக்கில் நடந்து மாணவ சமுதாயத்திற்கு ஊறு விளைவிக்குமாறு நடக்கின்றார்களே, அவர்களா மாணவர்கள்?– அப்படியென்றால் மாணவர்கள் என்றால் குழப்பம் உண்டாக்குபவர்கள்– கண்டக்டர்களை அடிப்பவர்கள் என்பது தான் பொருளா?- இந்த நிலைமை நீடித்தால் மாணவ உலகின் நிலைதான் என்ன?

மாணவ உலகு இனிமேலாவது சிந்திக்குமா? தொழிலாளர்கள் திருந்துவார்களா? என்று பூச்செண்டு வேதனையுடன் அவர்களின் பதிலை எதிர்நோக்கி நிற்கின்றது.

With the best compliments from :

PILOT PEN CO. (India) PVT. LTD.




'Catholic Centre,' Armenian St, MADRAS-1.

www.thamizham.net - Free E Books No TM 14719

கேள்வி ஒன்று !

பதில் : மூன்று !!!

# மகளிரே பதிலளிக்கின்றனர்!

பதிலளிப் போர் : 1. செல்வி : ஆனந்தி 2. செல்வி : பி. வி. அருணு செல்வி : க. கருப்பாயி (செயற்குழு உறுப்பினர்கள்.)

பொ. நீதி வேந்தன், திருச்சி-1.

1. வாலண்டினு ஸ்புட்னிக்கில் உலகை வலம் வந்த முதல் பெண்? தமிழகத்தில் நீங்கள் முதலாவதாக ஆற்ற உள்ள செயல்?

○ ஆற்ற வேண்டிய செயல்கள் பல. முதல் செயல் எது? என்று சிந்திக்க வேண்டும்.

○ நான் தற்போது பயிலும் இளங்கலை வகுப்பினை சீராக முடித்தலே நான் முதலாவதாக ஆற்ற உள்ள செயல்

○ தமிழுக்கு என்னுலியன்ற சிறு தொண்டு செய்தல்.

க. செல்லையா, இராஜபாளையம்

2. தமிழ் நாட்டிலே எந்த மாவட்டம் தமிழ் நன்ருகப் பேசுவதில் முதல் இடம் வகிக்கிறது?

○ எனது மாவட்டமான தஞ்சை தான், என்பது எனது தாழ்மையான கருத்து.

○ சங்கம் வைத்து தமிழ் வளர்த்த, தமிழர்கள் மிகுந்த மதுரை மாவட்டம் தான்!

○ நான் தமிழகம் முழுவதும் சுற்றிய பின் விடை தருகிறேன்.

ப. கணபதி, திருச்சி
தேசியக் கல்லூரி

3. பூச் செண்டின் எதிர்காலம் பற்றி தங்கள் கருத்து என்ன?

⊛ ஒளி மயமான எதிர் காலம்.

⊛ அரசியல் கலப்பற்ற தூயமணமுடைய நம் பூச்செண்டிற்கு நல்ல வளமான எதிர் காலம் நலமாக காத்துள்ளது

⊛ தளராமல் தழைத்தோங்கி மணம் வீசுமென்ற நம்பிக்கை எனக்குண்டு.

எஸ். எம். சுந்தரம், மேல் விஷாரம்

4. எப்போதும் சுறு சுறுப்பாக இருக்க என்ன வழி?

○ சோம்பலை அறவே ஒழித்தல்

○ பதில் விடுக்க சோம்பலாய் உள்ளது

○ கடமைகளைக் குறித்த முறையில் செய்யுங்கள்

---

கோடிட்ட 13வது கேள்வி சிறந்த கேள்வியாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

பரிசு: "உயிரோவியம்"
(நாராயண துரைக்கண்ணன்)

www.thamizham.net - Free E Books No TM 14719

செ. பழனிச்சாமி, வெப்பலோடை.

5. பூமியிலிருந்து பார்க்கும் போது சந்திரன் தலைக்கு மேல் தெரிகிறது அல்லவா? ஆனால் சந்திரனிலிருந்து பூமியைப் பார்த்தால் பூமி எப்படித் தெரியும்?

○ உருண்டையாகத் தெரியும்.

○ தலைக்குக் கீழாய் தெரியுமோ என்னவோ!

○ நான் இன்னும் சந்திரனுக்குப் போய்ப் பார்க்கவில்லை

பெரி. நாகப்பன், தியாகராயர் கல்லூரி, மதுரை

6 பூவையர்கள் பூச்செண்டை எவ்வளவிற்கு விரும்பிச் சூடுகிறார்கள்?

○ இது வரைக்கும் எந்த பூவையரும் பூச்செண்டை சூடி நான் கண்டதில்லை

○ மங்கலத்திற்கோர் சின்னமான மலர்கள் நிறைந்த பூச்செண்டினை மங்கையர் இறுதி வரை சூடுவர்,

○ பணத்தாலன்றி மனத்தாலும், மணத்தாலும் விரும்பிச் சூடுகிறார்கள்.

கே. பாஸ்கர் ராஜ். மன்னர் கல்லூரி, புதுக் கோட்டை

7. Tamil Medium பற்றி தங்கள் கருத்து என்ன?

* அவசரப்படாமல் ஆலோசிக்கவேண்டியதாயிற்றே!

காலந்தால் மூத்த கன்னித் தமிழாம் தாய் மொழியில் நாம் பயில கொடுத்து வைக்க வேண்டும்

* தமிழ் வாழவும், தமிழர் வாழவும் ஒப்பற்ற வழியாக அமையும்.

கணபதிராம், மதுரை-11.

8. 'பெண் புத்தி பின்புத்தி' என்று ஆன்றோர் கூறியது பற்றி தங்களுடைய கருத்துக்கள் யாவை?

◉ ஆன்றோர்கள் கூறியது அந்தக் காலத்தில்! இப் பழமொழி இக் காலத்திற்கு முற்றிலும் உகந்தது அல்ல

◉ அவ்வாறு கூறியவர் ஆணாக இருந்தால் அவருக்கு எனது பாராட்டுக்கள்.

◉ இக் கூற்று எல்லாப் பெண்களுக்கும் பொருந்தாது.

எஸ். எஸ். புருஷோத்தமன், மதுரை

9. பூச்செண்டின் மூலம் மாணவர்கட்கு கல்வியை கற்கும் பகுதியையும் வெளியிட்டால் என்ன?

◉ ஆலோசனை செய்யப்படும்.

◉ நல்ல கருத்தினை ஏற்க என்றுமே பூச்செண்டு தயங்கியது இல்லை. தயங்கவும் தயங்காது.

◉ இதனால் பூச்செண்டு பரவவும், அறிவும் வளரவும் நல்ல வாய்ப்புண்டு.

கா. பரதன், மதுரைக் கல்லூரி

10. பெண்களுக்குச் சம உரிமை என்பது மாறி முழு உரிமை என்றாகி விடுமோ?

◉ முழு உரிமை— விளக்கம் தேவை.

◉ நிமிடமொரு பிரச்சினைகளாக -கணக்கற்ற பிரச்சினைகள் உருவாகும் இந் நாளில், தாங்கள் இவ் வினாவினையும் ஒரு பிரச்சினையாக எழுப்பி விட்டீரே!

◉ அச்சம் தவிர்மின்.

www.thamizham.net - Free E Books No TM 14719

அடுத்த இதழ் சிறந்த கேள்விக்குப் பரிசு ஜாவர் சீதாராமனின் 'நானே நான்'

—ராணி வெளியீடு

கே. சிவ சுப்பிரமணியன், பொள்ளாச்சி

11. ஆடம்பரமாக செலவு செய்து நேரத்தையும் பணத்தையும் வீணாக்கிக் கொண்டிருக்கும் பணக்காரர்களுக்கு வறுமையால் வாடி நிற்கும் ஏழைகளைக் கண்டு மனம் தளராத காரணம் என்ன?

❖ இது பணக்காரர்களுக்கே உரிய தனி 'பண்பு'

❖ பணம் படைத்தவன் என்றுமே பணம் படைத்தவனாய் இருக்கமுடியாது. ஏழை என்றும் ஏழையாக இருக்க மாட்டான். இதை உணராத மனித மனமே இதற்குக் காரணம்,

* மனிதனை மனிதனாக மதித்து நோக்கும் மனப் பண்பு வளராமையே.

எஸ். கண்ணன், புதுக்கோட்டை

12. உலகில் அழகு நிறைந்த பொருள்கள் பல இருந்தாலும் பெண்களையே அழகில் சிறந்தவர்கள் என்பதேன்?

❖ அவ்வாறு கூறுவது முழுமையான மடத்தனம்.

❖ அழகு நிறைந்த பொருட்களால் மேலும் அழகு பெறுவது பெண்கள் தானே!

❖ அழகில் சிறந்தவர்கள் என்று கூறுபவரெல்லாம் ஆடவராக இருப்பதால் [பெண்ணைப் பெண்ணே பெரும்பாலும் பாராட்டுவதில்லை]

இரா. சஜ்ஜாத் அலி, தியகராயர் கல்லூரி, மதுரை.

13. இறைவனை நாம் ஏன் 'அவன்' என்ற ஆண்பாலால் குறிக்கிறோம். 'அவன்' என்றோ 'அது' என்றோ கூறினால் என்ன?

❖ உங்கள் இஷ்டம்.

❖ அண்மையில் தான் சுதந்திர தின விழாவினை கொண்டாடி உள்ளோம் என்பதை தங்கட்கு நினைவூட்டுகிறேன்.

❖ அவரவர் உள்ளத்தன்மைக்கேற்ப பலவாறு கூறுவதை உலகில் கண்கூடாகக் காண்கிறோம்.

வை. வீரசேனன், தஞ்சாவூர்.

14. சிந்தனையாற்றல் பெண்களிடத்தில் அதிகம் வெளிப்படுகின்றதா? அல்லது ஆண்களிடத்தில் அதிகம் வெளிப்படுகின்றதா?

❖ இருவரிடத்தும் தான்! ஆனால் அவற்றை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள ஆண்களுக்குத் தான் வாய்ப்புக்கள் உள்ளன.

❖ சிந்தனை என்பது அனைவர்க்கும் பொதுவான ஒன்று அவரவர் பயன் படுத்தும் வகையில் அதன் தன்மை அதிகம் வெளிப்படுகிறது.

❖ பெண்களிடத்தில் ஏற்பட்டாலும் ஆண்களிடம் அதிகம் வெளிப்படுகிறது.

குறிப்பு : அடுத்த இதழ் முதல் ஆசிரியர் குழுவினரே மீண்டும் விடையளிப்பார்கள்.

www.thamizham.net - Free E Books No TM 14719

செல்வி. பொன்னி.
இரண்டாமாண்டு
மருத்துவம் மதுரை
மருத்துவக் கல்லூரி

# உப்புப் போட்ட பாலைக் குடித்த மருத்துவக் கல்லூரி மாணவியின் சுவையான அனுபவங்களைக் கேளீர் !

"தெருவில் குரங்காட்டி தன் கையில் பிரம்பை வைத்துக் கொண்டு ஒரு குரங்கை கயிற்றால் கட்டிப் பிடித்துக் கொண்டு பாட்டுப் பாடி ஆடவைப்பானென்றால், நான் கையில் பிரம்பில்லாமலேயே கயிற்றால் கட்டப்படாமலேயே- குப்பைக் கூடையைத் தலையில் சுமந்து கொண்டு, அழுதகண்களுடன், "இலந்தப்பயம்" பாட்டிற்கு பேயாட்டம் போட்டேன். எப்போது? ராகிங்கின் போது! புதிதாகக் கல்லூரி விடுதியில் சேருவோருக்கு வேண்டியது: பொறுமை, வேண்டாதது: வெட்கம். இல்லாவிடில் என்னைப் போன்று உப்புப் போட்ட பாலைக் குடிக்க முடியாது. இரண்டு மூன்று முறை விடுதி மைதானத்தைச் சுற்றி நிறுத்தாமல் இரைக்க இரைக்க ஓடி வரமுடியாது முதுநிலை மாணவர்கள் (seniors) சொன்னபடி காலையில் 4 மணிக்கே எழும்பவேண்டுமென்பதால் அலாரம், கிலாரம் எல்லாம் வைத்துக் கஷ்டப்பட்டு எழுந்து, அவர்களின் அறையைத் தேடி ஓடிப் போய் எழுப்பிய பின் கிடைக்கும் பரிசான, "சனியனே! நல்ல தூக்கத்தை வந்து கெடுத்தாயே! இருந்திருந்து உன் முகத்தில் தானா எழுந்து விழிப்பது?" என்ற வசைமொழிகளைப் பொறுக்க முடியாது. ஒரு வார காலத்திற்குத் தான் இந்தவாழ்க்கை. அப்புறம்... அதட்டி வைத்தவர்கள் எல்லாம் அன்புச் சகோதரிகளாக மாறிவிடுவார்கள். ராகிங் என்பது இளநிலை மாணவர்களையும் (juniors) முதுநிலை மாணவர்



www.thamizham.net - Free E Books No TM 14719

களையும் (Seniors) இணைக்கும் ஒரு அன்புக்கயிறு. ஆனால் அந்த கயிறு இணைப்பதற்குத் தானே ஒழிய இறுக்குவதற்கல்ல என்பதை சில சீனியர்களும் உணரவேண்டும்.

எனக்கும் Junior கள் வரப்போகிறார்கள். நான் அவர்களை ராக் பண்ணுவேனா? மாட்டேன்! மாட்டேன்!

பண்ணுமலிருக்க மாட்டேன்.

## 2


ப. இரகுபதி.
பொறியியல்
இரண்டாமாண்டு
தியாகராசர் பொறியியல் கல்லூரி மதுரை.


# 'பூனை தன் குட்டிகளைக் கவ்விச் செல்லுவதால் குட்டி இறந்து விடுமா?' என்கிறார் பொறியியற் கல்லூரி மாணவர்.

"ராகிங் என்பது 'புது முகங்களின் அறிமுகம்' என்று என்னை ரா்கிங் செய்த மாணவர்கள் சொல்லி 'கான்டீன்' 'டைனிங் ஹால்' விடுதி அறை ஆகிய அனைத்திலும் என்னை ராக் செய்தார்கள். பற்பல கேள்விகளுக்கு பதில் சொன்னேன்; பலவிதமான செயல்களை கசப்புடன் ஒன்றும் செய்ய முடியவில்லையே என்ற ஆற்றாமையுடன் செய்தேன். என் உடை எனக்குப் பகை. கல்லூரிக்கு செல்லவே கசப்பு (எப்போதும் தான் என்கிறீர்களோ) நாளடைவில் பல முதியோர் எனக்கு நண்பர்கள் ஆனார்கள். ஒராண்டு கழித்து. இன்று இளையோர் பலர் வந்தவர். ஓடு என்றால் ஓடினர்; நில் என்றால் நின்றார்கள்; கேள்விகள் பலவற்றிக்கு அழுதார்கள். உள்ளாடையுடன் ஓடினர். இன்னும் என்னென்னவோ வெல்லாம் நடந்தது.

ஆனால் இளையோர் பலர் எனக்கு இன்று நண்பர்கள். பூனை தன் குட்டிகளைக் கவ்விச் செல்வதால் குட்டி



இறந்து போவதில்லை. ஆனால் வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்குத் தான் பயமாய் இருக்கும் பாவம்!

பேட்டி: திரு வே. மாலன்

(மதுரை - செயற்குழு)

www.thamizham.net - Free E Books No TM 14719



அப்புலித்தரையில் விண்வெளி வீரர்கள் விட்டுவந்துள்ள அடிச்சுவடுகளில் ஒன்று.

# சந்திரனுக்குப் போனலும் போனர்கள்!

*[நிலவு பயணத்தைப் பற்றித் தமிழ் நாட்டில் என்ன பேசிக் கொள்கிறர்கள்? - கற்பனை யல்ல; காதால் கேட்டது தான்]*

**வேலைக்காரி முனியம்மா :—** என்னப்பா, கதையளக்கிறீங்க! இவங்க போயி எடுத்துட்டு வர்றதக்கு அங்கே மண்ணைக் கொட்டி வைச்சிருக்கா என்ன?

**ஒரு குடும்பத்தலைவர் :—** ஹூம்! குடும்பம் எக்கேடும் கெடட்டும்னு நிம்மதியாய்ப் போயிட்டாங்க. நம்மாலே அப்படிப் போகமுடிகிறதா?

**நிதிதிரட்டிச் சலித்துப் போனவர் :—** இன்னெருத்தன் பணம் தர்ரேன்னு எல்லோருந்தான் சந்திரனுக்குப் போவாங்க; உன் பணத்தைப் போட்டுண்டு போடான்னு, ஒரு பயலாவது போவானு? கேக்கறேன்!.

**பத்திரிகை நிருபர் :—** ஒரு கொலை, கொள்ளை கிடைக்கலையே என்று பார்த்தேன், நல்ல வேளை, தலையங்கம் எழுத இதுவாவது கிடைத்ததே!

**அரசியல் வாதி :—** சந்திரமண்டலத்திலும் தனி நாடு வேண்டுமென்று போராடுவோம். உண்ணு விரதங்கள் (சாப்பாட்டு வேளைக்கு இடையில்) நடத்துவோம். மாணவர்களைத் தூண்டி கலாட்டாக்கள் ஏற்பாடு செய்வோம்.

தொகுத்தவர் கற்பகவாணி, பி. எஸ்ஸி
II எம். பி., பி. எஸ். சென்னை மருத்துவக் கல்லூரி.

www.thamizham.net - Free E Books No TM 14719

கற்பனைக்கூடம்

பரிசு : திருக்குறள் தெளிவுரை (மு. வ.)

பரிசு பெறுபவர் : செல்வி மா. கு. சரஸ்வதி
மாட்டின்வல்சு.

# இந்தியாவில் 100% படித்தவர்கள் என்ற நிலை வந்து விட்டால்...?

இந்தியாவில் 100% படித்தவர்கள் என்ற நிலை வந்து விட்டால் எல்லாத்துறையிலும் நம்நாடு உலக அரங்கில் ஒரு சிறப்பான இடத்தை வகிக்கும் என்பதில் ஐயமில்லை. முதலில் சாக்கடையாக இருக்கும் அரசியல் சந்தனமாக மணக்க ஆரம்பிக்கும் காரணம் படிக்காத பாட்டாளி மக்களை உணர்ச்சி ஒன்றையே அடிப்படையாக வைத்து ஓட்டு வாங்கும் கருங்காளிக் கூட்டங்கள் மறைந்து விடும். பொருளாதார சீர் கேடுகள் 100% படித்தவர்களால்தான் மாற முடியும். எப்படி யென்றால், மதிப்பிற்காக வேலை என்று இல்லாமல் உயர்வதற்காக உழைப்பு என்றாகும். நூறு சதவீதம் படித்தவர்கள் இல்லாததால்தான் இன்று உத்யோகங்களில் "அந்தஸ்து" பார்க்கப் படுகிறது

நான் பி. ஏ. படித்திருக்கிறேன். விவசாயம் செய்வதா? என்றும் எஸ். எஸ். எல். சி. படித்து விட்டு ஓட்டலில் வேலை பார்ப்பதா? என்ற அர்த்தமற்ற எண்ணம் போய் செய்யும் தொழிலே தெய்வம்' என்ற நிலை ஏற்படும். உழைப்பாளிகளை மதிக்க தெரியாதவர்கள் என்ற எண்ணம் மாறி (Dignity of Labour) 'உழைப்பின் கௌரவம்' என்கிறார்களே அந்த நிலைவரவும் வாய்ப்பிருக்கும். ஜப்பான் அமெரிக்கா போன்ற நாடுகளில் ஊதியத்திற்காக வேலை பார்க்கிறார்களே யன்றி வேலையில் அந்தஸ்த்தைப் பார்ப்பதில்லை. இந்த நிலை நம் நாட்டில் வர, 'கல்வி'யைத் தவிர வேறு சிறந்த சாதனமில்லை.

100% படித்தவர்கள் என்ற நிலை வரும் போது, நம் நாட்டில் எல்லோரும் பட்டதாரிகளாகவே இருப்பர். இதனால் தன் படிப்புப் பெருமையைக் காட்டிக் கொண்டு உழைப்பை தட்டிக் கழிக்க முடியாது. ஒரு சிலர் முதுகெலும்பு உடைய உழைக்க பலர் நகத்தில் அழுக்குப் படாமல் திரிகிறார்களே, அந்த நிலை 100% படிப்பால்தான் மாற முடியும். பொது மக்களுக்காக இருக்கும் உணவு பங்கிட்டு, கடைகளிலிருந்து வங்கி (பேங்) வரை ஊழல் நிரம்பியிருப்பதற்குக் காரணம் 100% படிப்பு இல்லாதது தான். ஒரு ரூபாய் அரிசி ஐந்து ரூபாய்க்கு விற்றாலும், ஏன் என்று தட்டிக் கேட்கத்

www.thamizham.net - Free E Books No TM 14719

● இந்தியாவில் எழுதப்படிக்க தெரிந்தவர்கள் தொகை: ஆண்களில் 34.44% பெண்களில: 12.95% தான். மொத்தத்தில் நூற்றுக்கு 25% கூட எழுதப்படிக்க தெரிந்தவர்கள் இந்த நாட்டில் இல்லை என்பது எவ்வளவு வேதனையான செய்தி!

தெரியாத நிலை இன்றைய மக்களுக்கு! ஆனால் 100% படித்தவர்கள் என்ற நிலை வரும்போது இப்படிப்பட்ட நிலை இருக்காது என்பது வெள்ளிடை மலை'. ஏனென்றால் எல்லோருக்கும் நாட்டின் நடப்பு நன்கு புரிந்திருக்கும் தீய சக்திகளைக் கண்டு அஞ்சவேண்டியதிருக்காது. லஞ்சம். கலப்படம். தீண்டாமை என்ற காரிருள் படிப்பு என்றக் கலங்கரை விளக்கத்தின் முன் ஓடி ஒளிந்து விடும். இது மட்டுமல்ல 'ஸ்ட்ரைக்' என்ற பெயரால் பத்துப் பேர்கள் தங்கள் மன விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள படிப்பற்ற ஏழை மக்களை அற்பகாசுக்காகத் தூண்டி விட்டு கோஷமிடச் செய்கிறார்களே அந்த மோசமான நிலை மாறும். எத்தனை படிப்பாளிகள் வெளிநாட்டிலேயே தங்கி விட்டாலும் நம் நாட்டிற்கு தேவையான படிப்பாளிகள் மலிந்து விடும் காலம் வரும். உழைக்கும் காசையெல்லாம் பொழுதுபோக்கு என்ற பெயருடன் உறிஞ்சுகின்றதே "உடையில்லாத் திரைப் படங்கள்" அது படுத்துவிடும். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்பது பாட்டில் மட்டுமில்லாமல் நடப்பிலும் வரும். முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையிலிருக்கும் இரும்புச் சுவர் உடையும். நாட்டில் மலிந்திருக்கும் பொய். கொலை களவு போன்ற வன்செயல்கள் மறையும். உழைப்பவர்கள் தான் நாட்டின் முதுகெலும்பு என்றுப் பேசிவிட்டு லாபத்தில் முதுகெலும்பொடிய பாடுபடும் பாட்டாளிகளுக்கு ஊதியம் கொடுக்க விரும்பாமல் செல்லும் பணக்காரர்களின் ஆதிக்கம் ஒழியவும் ஒரே வழி 100% படிப்புத்தான்.

பாபுஜியின் கனவு நனவாக 100% படிப்பு அவசியம். "எவனொருவன் தன் வயிற்றிற்கு வேண்டிய உணவிற்கு தன் உடல் உழைப்பை செலுத்தாமல் இருக்கிறானோ அவன் திருடனுக்கு சமமானவன்" என்று 'அண்ணலின்' வாக்குத்தான் இன்றைய நடைமுறையில் பார்கிறோம். இது மறைந்து நாட்டின் அமைதியும் அழகும் கொலு வீற்றிருக்க நாம் செய்ய வேண்டிய சிம்மாசனம் 100% கல்வியே ஆகும்.

வள்ளுவத்தையும், காந்தியத்தையும், போற்றிக் கொண்டாடும் இந்த நாளில் 100% படிப்பு அவசியம் என்பதை யார் மறக்கவோ மறுக்கவோ முடியும்.?

அடுத்த இதழ் கற்பனைக் கூடத்திற்கான தலைப்பு:

**"காந்தியடிகள் சுடப்படாமல் இன்று நம்மோடு வாழ்ந்திருந்தால்...?"**

**பரிசு: காந்தியடிகளின் 'சத்தியசோதனை'**

முழுத்தாளில் 2 பக்கத்திற்குள் உங்கள் கற்பனை செல்கின்றபடியெல்லாம் எழுதலாம் வந்து சேரவேண்டிய இறுதி நாள் 20-9-69.

www.thamizham.net - Free E Books No TM 14719

# "THE INDIAN YOUTH ASSOCIATION"

*Youth alone can save India*

**நண்பர்களே !**

'நாளும் நலிந்து பொருளில் மெலிந்திருக்கின்ற மக்கள் கோடிக் கணக்கான அளவில் இந்தியாவில் பெருகி வருகின்ற இந்நாளில், நாளைய இந்தியாவில் பொறுப்பேற்கப் போகின்ற இன்றைய இளைஞர்களின் பங்கு என்ன?' என்று நம்மை நாமே கேட்டுக் கொள்வோமேயானால் 'ஒன்றுமில்லை' என்றுதான் பதில்வரும். பிரச்சினைகள் நாளும் மலிந்து இளைஞர்களின் சுமை பெருகிவருகின்ற பொழுது 'இந்த பிரச்சினை எந்த அளவில் இளைஞர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்?' என்று வினவினால் விடை நிறைவு தருவதாய் 'இல்லை' புரிந்து கொண்டிருப்பவர்களில் எத்தனைபேர் ஒருவருக்கு ஒருவர் தொடர்பு கொண்டு ஆக்க வேலைகளில் ஈடுபட்டுள்ளனர் என்ற கேள்விக்கே இன்று இடம் 'இல்லை'

## இல்லை! இல்லை! இல்லை!

இவ்வெற்றுப் பதில்களுக்கிடையே வலிமை மிக்க ஒரு தலைமுறையின் மகத்தான ஆற்றல் இன்று வீணாகிக்கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து நம்மை நாமே கேட்க்கொள்கின்ற கேள்விகளுக்கு உரிய விடைகளை அறிந்து அவற்றிற்கு உருகொடுக்கவே 'The Indian Youth Association' அமைக்கப் பட்டிருக்கிறது.

'இந்தியாவெங்கும் சிதறியிருக்கின்ற இளந் தலைமுறையினரை ஒன்றுபடுத்தி அவர்கள் கலந்துரையாட வாய்ப்பளிப்பது. இந்தியப் பிரச்சினைகள் பற்றிய இளந் தலை முறையினரின் கருத்துக்களைத் தொகுப்பது. ஆண்டுக்கு ஒரு முறை உறுப்பினர்களைக் கூட்டி கருத்தரங்கு நடத்துவது' என்ற குறிக்கோள்களுடன் இவ்வமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. எங்களுடன் தொடர்பு கொண்ட பலர் பல்வேறு பிரதிநிதிகளைத் திரட்டி அதன்பின் அமைப்பின் குறிக்கோளை வரையறுத்து பிறகு அமைப்பு செயலாற்ற வேண்டும் என்று எழுதியுள்ளபடியால் அவர்களின் கருத்துக்கு முதலிடம் அளித்து (குறைந்தது) தமிழகத்தின் பல்வேறு பகுதியில் உள்ள மாணவ-இளைஞர்களுடன் தொடர்பு கொள்ள முயன்று வருகின்றோம். என்வே ஆர்வமுடையவர்கள் அனைவரும் கீழ்க்கண்ட முகவரியில் உடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம். விரைவில் எல்லோரும் கூடி அமைப்பின் கொள்கைகளை வரையறுக்கும் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து வருகின்றோம். எனவே எங்களுடன் உடன் தொடர்பு கொள்ள உங்களை அழைக்கின்றோம்.

இவ்வண்,

**அமைப்புக் குழுவினர்.**

முகவரி :


**N. POOSAPPA**
JOINT SECRETARY,
THE INDIAN YOUTH ASSOCIATION,
NALLAMBALAYAM,
KASIPALAYAM-PO, ERODE-2


www.thamizham.net - Free E Books No TM 14719

# இந்த இலக்கியப் புதிரைக் கண்டுபிடியுங்கள் !

க. செல்லப்பன்
புனித சூசையப்பர் கல்லூரி.

மலரும் மணமும், வானும் நிலவும், வீணையும் நாதமும் போல புலமையும் வறுமையும் பிரிக்க முடியாத ஒன்று. ஆம், சுந்தர கவிராயர் அன்று தம்மை வறுமை வாட்டவே, தேன் பாயுஞ் சோலைத் திருவிரிஞ்சை மன்னன் மாளிகை நோக்கி கழனிகள் சூழ்ந்த அந்த நெடுவழியில் நடந்து சென்றார். புலவருக்கோ பசியின் கொடுமை விநாடிக்கு விநாடி அதிகரித்தது. அப்போது வழியில் புலவர் ஒரு காட்சியைக் கண்டார். என்ன விந்தை! அந்த நிமிடமே அவர் பசி பறந்து விட்டது. அப்படி அவர் என்ன காட்சியை கண்டுவிட்டார்? அதை அவரே கூறுகிறார்.

> "பத்துக்கான் மூன்றுதலை பார்க்குங்கண் ணூறுமுகம்
> இத்தரையி லாறுவா யீரிரண்டாம் - இத்தனையும்
> ஓரிடத்திற் கண்டே னுகந்தேன் ; களி கூர்ந்தேன்
> பாரிடத்திற் கண்டே பகர்."

கவிஞர் தான் கண்டதோடு அது போன்ற காட்சியைப் பாரிடத்தில் பார்க்கப் பணிக்கிறார். என்ன காட்சியை கவிஞர் கண்டார் என்பதை உங்களால் ஊகம் செய்ய முடிகிறதா? முயன்று பாருங்கள், முடியாவிட்டால் விடைக்கு இதே பக்கத்தைத் திருப்பவும்.

விடை—

சற்று நுணுகி நோக்கின், இந்தப்பாட்டில் ஒரு மனிதனும், இரண்டு காளைமாடுகளும் மறைந்து இருப்பது காணலாம். ஆம் காளைகள் இரண்டடக் கலப்பையில் பூட்டி உழுகிறான் உழவன், அந்தக் காட்சியைக் கண்டார் புலவர். அதைத்தான் பாட்டில் கூறுகிறார். "மனிதனின் இரண்டு கால்களோடு, மாடுகளின் எட்டு கால்களும் சேர்ந்து மொத்தம் பத்துக் கால்களையும், மனிதனின் தலை, மாடுகளின் இரண்டு தலை, ஆக மூன்று தலைகளையும், மனிதனின் இரண்டு கண்களுடன், மாடுகளின், நான்கு கண்களுஞ் சேர்ந்து ஆறு கண்களையும், மனிதனின் முகம், காளைகளின் முகங்கள், கொழுமுகம் ஆக (ஈரிரண்டு) நான்கு முகங்களைக் கண்டேன்" என்கிறார் என்னே புலவர் போட்ட புதிர். —தனிப்பாடல்

---

## இடி தாங்கிக் கார் !

○ தங்கள் கார் மீது இடி விழுந்து விடுமோ என்று காரில் செல்வோர் அஞ்சவேண்டியதில்லை. இடியை தாங்கும் ஆற்றல் மிக்க புதுமையான சாதனம் ஒன்றை மேற்கு பெர்லின் நகரின் நிபுணர்கள் கண்டுபிடித்து விட்டார்கள். இதனை காரில் பொறுத்தி விட்டால், அது இடியைத் தாங்கிக் கொள்ளும்.)

B. I. S.

---


www.thamizham.net - Free E Books No.TM 14719


# ஆணும் பெண்ணும் சேர்ந்து படிக்கலாமா?

**பம்பாயில் தனிக்கல்லூரி இல்லை! எந்த ஆணின் பக்கமும் அமர்வோம்!**

**இதில் என்ன தவறு?**

**இவர்களை கேட்போம்**





கீழ்பாக்க மருத்துவக் கல்லூரி

**சேஷசயனம் கூறுகிறார்**

கூட்டுக் கல்வி, தொழிற்கல்விக்கு மிக மிக அத்தியாவசியமானது. இருபாலரும் சேர்ந்து படிப்பதால் மாணவர்கள் செய்யும் அட்டகாசங்கள் ஓரளவு குறையும் ஏனெனில் தங்களை மாணவிகள் கவனிக்கிறார்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கும். எனவே ஒழுக்கத்துடன் நடந்து கொள்வார்கள். மற்ற கல்லூரி மாணவிகளிடமும் வம்புக்குச் செல்ல மாட்டார்கள். மாணவிகளிடையே தங்கள் புகழ் பரவ வேண்டுமென்றும் எண்ணத்திலேயே பலர் படிப்பிலும், பிற செயல்களிலுல் அதிக நாட்டம் செலுத்துவார்கள்.

சென்னை மருத்துவக் கல்லூரி.

**குணாளன்**

வரவேற்கிறார்:

இருபாலரும் சேர்ந்து படிப்பதை நான் வரவேற்கிறேன். இவ்வாறு படிப்பதால், மாணவ மாணவிகளிடையே உள்ள வேற்றுமை உணர்வு மறைகின்கிறது. இருபாலரும் சமமாகப் பழகும் வாய்ப்பு ஏற்படுகிறது. கல்வி பயலும் முறையில் போட்டி மனப்பான்மை ஏற்படுகிறது.

**புனித சூசையப்பர்**

கல்லூரி மாணவர்

**இல.பழனியப்பன் வலியுறுத்துவது**

இன்றைய மாணவ சமுதாயத்தில் இம் முறை கல்லூரி அளவில் வரவேற்கத்தக்க ஒன்றாக இருக்கிறது. மாணவர்கள் மாணவிகளுடன் சேர்ந்து பயிலும் பொழுது பல்வேறு உள்ளக் கருத்துக்கள் வெளி வருகின்றன. அதன் காரணமாக ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்வதுடன் கருத்துப் பரிமாற்றமும் ஏற்பட வழி இருக்கிறது. மற்றொரு நன்மை மாணவர்கள் வகுப்பில் சீரான உடையில் அமர்ந்திருப்பார்கள். மேலும் அவர்களை வகுப்பினுள்ளே சந்திப்பதால் மனம் சீரான நிலையில் இருக்கும்.

www.thamizham.net - Free E Books No TM 14719



பம்பாயில் படித்த சுதா சொல்கிறார்:

நான் எனது புகுமுக வகுப்பினை பம்பாய் நகரில் படித்தேன். அங்கு இங்குள்ளதைப் போன்று பெண்களுக்குத் தனிக் கல்லூரி, தனிபஸ் என்று கிடையாது. அங்கு ஒரே ஒரு கல்லூரி தான் பெண்களுக்கென்று தனியாக உள்ளது. மற்ற கல்லூரிகளிலெல்லாம் பள்ளிகளிலும் கூட இருபாலரும் சேர்ந்தே தான் பயிலுகின்றனர் பள்ளிகளில் பெண்களுக்குத் தனி இடமும் கிடையாது. எந்த ஆணின் அருகே இடமிருந்தாலும் நாங்கள் சென்று உட்காருவோம். அங்குள்ள மாணவர்களும் அதிகமாக கலாட்டா செய்யாது சரளமாகப் பேசிக் கொண்டு இருப்பார்கள். இதனாலேயே அங்குள்ள பெண்களுக்குப் பல ஆண் நண்பர்கள் உண்டு. பெண்களும் அதனை வேறுபாடாகக் கருத மாட்டார்கள். ஆனால் இங்கு சென்னையில் மாணவிகள், மாணவர்களின் அருகே செல்லவும் தயங்குகின்றனர் காரணம் இந்த மாணவிகள். மாணவர் அருகே வந்து நின்று விட்டாலே மாணவர்கள் ஏதாவது கலாட்டா செய்கின்றனர். அங்கு இருபாலரும் பாகுபாடில்லாமல் சேர்ந்து படிப்பதால் அங்குள்ள மாணவர்கள் பெண்களைக் கேலி செய்யாது தம் வழியே செல்கின்றனர். இருபாலரும் சேர்ந்து படித்தால் இத்தொல்லைகள் நேரிடா. மேலும், இங்குள்ள மாணவ மாணவியர்கள், தமிழகத்திலேயே தமிழ் பேசுவதை இழிவாசக் கருதுகின்றனர். தமிழர்களே தமிழ் பேசாவிடின் தேனினும் இனிய தமிழ் மொழிக்கு வளர்ச்சி ஏது? உயிர்ப்பு ஏது?

ஸ்டெல்லா மேரி கல்லூரி
T. வசந்தா P.U.C:

கல்வி முன்னேற்ற மடைய வேண்டுமானுல்,

பெண்களும் ஆண்களும் சேர்ந்து படிப்பதில் யாதொரு தவறு இல்லை. இருபாலரும் சேர்ந்து படித்தால் பகுத்தறிவும் வளரும் படிக்கும் பொழுது நமக்குத் தெரியாததை மாணவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டால் அது பிறகு மிகவும் நன்மை தரும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் கல்லூரிகள் தனித்து இருப்பதால் மாணவர்களும் மாணவிகளும் வகுப்பை விட்டு வெளியில் சுற்றுகின்றனர். கூட்டுக் கல்வி இருந்தால் அனைவரும் வகுப்பிலேயே இருப்பார்கள். ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு படிப்பார்கள். இதனுல் கல்வியும் முன்னேற்ற மடையும்.

கீழ்பாக்க மருத்துவக் கல்லூரி
குமாரி மஞ்சு பாஷினியின் கருத்து

கல்லூரிகளில்—குறிப்பாக மருத்துவக் கல்லூரிகளில்—கூட்டுக் கல்வி முறை மிக அவசியம்.

சில சமயங்களில் ஆண் நோயாளிகள் வரும் போது, அவர்களிடத்தில் சில கேள்விகளை எங்களால் கேட்க முடியாத நிலை ஏற்படுகிறது. அதே போல் அவர்களும் பதில் சொல்லத் தயங்குவார்கள். ஆண்களும் பெண்களும் சேர்ந்திருந்தால் எல்லா நோயாளிகளிடமும் எல்லாற்றையும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

பேட்டி : செயற்குழு

www.thamizham.net - Free E Books No TM 14719

# தூத்துக்குடிக்கு திமிங்கலம் வந்தது!

## திமிங்கலத்தின் காதலன் தேடிக் கொண்டு இருக்கிறதாம்!

என்றும் போல் அன்றும் ஆதவன் வீழ்ந்து ஆழ்கடல் அமைதியான அந்த பொன்னான மாலைப் பொழுதிலே, கரையினை நோக்கி தங்கள் தோணிகளை செலுத்தி திரும்பிக் கொண்டிருந்தனர் தூத்துக்குடியைச் சேர்ந்த மீனவர்கள் சிலர் "இதென்ன வாழ்க்கை! கடல் பூராவும் தேடியும் கைநிறைய காசு கிடைக்காத வாழ்க்கை" என்று அலுத்து, சலித்து கொண்டிருந்த அந்த மீனவர்கள் நினைத்துக் கூட பார்த்திருக்க மாட்டார்கள், இன்னும் சற்று நேரத்தில் ஒரு பெரிய ஆச்சரியத்தைச் சந்திக்கப் போகிறோம் என்று.

தூத்துக்குடியின் கடல், ஆர்ப்பரிக்கும் அலைகளை அதிகம் எழுப்பாத அமைதியான மன்னார் வளைகுடாப் பகுதி. தூத்துக்குடி நகரின் கடற்கரைப் பகுதியிலிருந்து சுமார் 8 மைல் தொலைவில் ஒரு தீவு இருக்கிறது. அங்கு தான் அவர்களுக்கு அந்த பேராச்சரியம் காத்திருந்தது. ஆம்... "கடல் வாழும் பிராணிகளின் அரசன்" என்று கருதப்படும் திமிங்கலம் ஒன்று அமைதியாக அசைவற்று கரையில் படுத்துக்கிடந்தது. அது உயிருடன் இருக்கிறதா உறங்குகின்றதா, அல்லது இறந்து விட்டதா? என்று மீனவர்களால் அறிய முடியவில்லை. ஆனால் திமிங்கலம் இப்படி உயிருடன் கரையில் ஒதுங்காது. ஒதுங்கினாலும் அமைதியாக உறங்காது. என்று எண்ணிய மீனவர்கள் அதை எப்படியும் நகருக்கு எடுத்துச் செல்லத் தீர்மானித்தார்கள். தோணியிலிருந்து இறங்கி, மீன் பிடித்த வலைகளை இணைத்து தூக்க உதவும் தடித்த கயிறுகளை பிணைத்து அதன வால் பகுதியில் சுருக்கிட்டனர். அப்பொழுது அந்த வால் சற்று நெளிந்து அசைந்தது. அந்த அசைவிலிருந்துதான் மீனவர்கள் உணர்ந்தார்கள் திமிங்கலம் உயிரோடு இருக்கிறது. என்ற பயங்கரமான உண்மையை. இவர்கள் கஷ்டப்பட்டு இறுக்கிய சுருக்கு கயிற்றை, அது வெகு வேகமாக, அலட்சியமாக உதறி எறிந்து விட்டது. கண் எதிரே உயிரோடு திமிங்கலம்! உடனே தப்பி ஓடவும் வழியில்லை. காரணம் அவர்களது தோணிகள் பாய்மரங்களையும் காற்றின் திசையையும் பொறுத்தவை நங்கூரம் போட்டு நிறுத்திய கலங்களில் நங்கூரத்தை எடுத்து, பாயை விரித்து கட்டி, உடனடியாக புறப்பட்டாலும், காற்று குறைவாக இருப்பதால், அதிக வேகம் செல்ல முடியாது என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். எனவே துணிந்து போராட முடிவு செய்தனர். இருப்பினும் "சும்மாயிருந்த பாம்பை சீண்டி விட்ட கதையாகி விட்டதே" என்ற அச்சம் அவர்களுக்கு இருந்து கொண்டேயிருந்தது.


தன் உயிருக்கு ஆபத்து என்பதினை உணர்ந்த திமிங்கிலம். தோணியையும். அதிலுள்ள மீனவர்களையும் தாக்க முற்பட்டது. ஆனால் மீனவர்கள் பக்கம் அதிர்ஷ்டம் இருந்திருக்க வேண்டும். திமிங்கலம் தனது தலைப்பகுதியை கரையில் வைத்து படுத்திருந்த படியால் எளிதில் திரும்ப முடியவில்லை. எனவே, தனது வாயிலில் நீரைச் சுழற்றி சுழற்றி அடித்து மீனவர்களை விரட்ட முயற்சி செய்து கொண்டிருந்தது.

இதற்கிடையில் அதே திசையில் வீடு திரும்பிக் கொண்டிருந்த மீன

www.thamizham.net - Free E Books No TM 14719

வர்கள் சிலர் இந்த காட்சியைக் கண்டு முதலில் திமிங்கலத்தைப் பார்த்த, தங்களது நண்பர்களுக்கு உதவ முன்வந்தனர். முதலில் வந்த தோணி, பின்னர் வந்த அவரது நண்பர்களின் தோணிகள் ஆகிய அத்தனை தோணிகளையும் சுற்றி அரண் போல் நிறுத்தி, திமிங்கலம் தப்பி விடாதபடி பார்த்துக் கொண்டனர். தப்ப வேறு வழியில்லாமல் சிக்கிக் கொண்ட திமிங்கலத்தை தடித்த கயிறுகளினால் கரைக்கு இழுக்க முற்பட்டனர் அத்தனை மீனவர்களும். ஆனால் கயிறு அறுந்தும் தோணிகள் நிலைதடுமாறிச் சாயத் தொடங்கியது தான் மிச்சம்! இவ்வளவு பெரிய திமிங்கலத்தை இழுத்துச் செல்வது நமது தோணிகளால் முடியாத காரியம் என்று கருதிய மீனவர்கள் தூத்துக்குடி துறைமுக டிரஸ்டின் உதவியை நாடினர். துறைமுகத்திலிருந்து "வீரபாண்டியன்" "வீரசோழன்" ஆகிய இரு விசை இழு படகுகள் அனுப்பப்பட்டன. இந்த இரண்டும் புதியதும், இழுப்பதற்கு அதிக பலம் (அவை சுமார் 10 டன் எடையை இழுக்கும்) கொண்டவையுமாகும். திமிங்கலம் இந்த இழு விசை படகுகளுடன் நீண்ட பெரிய சங்கலிகளால் பிணைக்கப்பட்டன. ஆனால் அவற்றின் முழு இழுப்புத் திறனும் திமிங்கலத்திடம் தோற்று விட்டது. திமிங்கத்தை கடல் நோக்கி இழுக்க வந்த கப்பல் இரண்டையும், கரையை நோக்கி இழுக்க ஆரம்பித்து விட்டது அது!

இதற்குள் மாலை நன்றாக மங்கி, இரவு துவங்கி இருள் எங்கும் பரவத் தொடங்கியது. இரவு முழுவதும் இந்த திமிங்கலத்தைக் கட்டி காப்பது இயலாத காரியம் என்பதினால் அதை சுட்டு கொன்று விடுவதே சரி, என்று துறைமுக அதிகாரிகள் கருதினார்கள். உடனே போலீஸ் உதவி நாடப்பட்டது குறிபார்த்து சுடுவதில் வல்லுவரான அதிகாரி ஒருவர் உடனே அனுப்பப்பட்டார். அதன் வால் பகுதியில் அவர் சுட்ட நான்கு குண்டுகளில் முதலிரண்டு, அதன் மேல்பகுதி வழவழப்பாக இருந்ததால், அதன் மீது பட்டு, திசைமாறித் திரும்பியது. மற்ற இரண்டும் அதன் மேல் பட்டு, ஒரு வழியாக அது இறந்தது. இருப்பினும், அதை முதலில் கண்ட மீனவர்கள் உயிருடன் பிடிக்க முடியாமல் போனது குறித்து இன்னமும் வருத்தப் படுகிறார்கள்.



சுடப்பட்ட திமிங்கலம்

இவ்வளவு கஷ்டப்பட்டு கரை சேர்க்கப்பட்ட அந்த திமிங்கலத்தை, அதன் இறந்த நிலையிலாவது பார்க்கத் தான் மக்களுக்கு எவ்வளவு ஆர்வம்! திரளான மக்கள் கூடிவிட்டனர். அதை முதலில் பார்த்து போராடி கொண்டு வந்த மீனவர்கள் புத்திசாலிகள்! இல்லாவிட்டால் தலைக்கு 25 பைசா வசூலித்திருப்பார்களா? சுமார் 8000 ரூபாய் சேர்ந்திருக்கும் என பேசிக் கொள்கிறார்கள். அப்படியானால் எத்தனை பேர் பார்த்திருப்பார்கள் என்று கணக்கிட்டு பார்த்துக் கொள்ளுங்கள்.

இரண்டு நாளில் உடல் அழுகத் தொடங்கிவிட்டது. அந்த உடலை,

www.thamizham.net - Free E Books No TM 14719

உண்மையான அறிவாளி தன் இரகசியத்தைத் தானே வைத்துக் கொள்ள வேண்டும்

—குய்லாட்

அதன் எலும்புக் கூட்டிற்காக நகரிலுள்ள வ. உ. சி கல்லூரியினர், தங்களது விலங்கியல் பிரிவினரின் சோதனைக்காக வாங்கி, புதைத்து விட்டனர்.

இந்தத் திமிங்கலம் எப்படி கரைப் பகுதிக்கு வந்து சேர்ந்திருக்கும் என அரசினர் மீன் துறையைச் சேர்ந்த அதிகாரிகளை வினவியதில் கிடைத்த தகவல்:- முழு நிலா நாளில் கடலின் நீர்மட்டமும், அலைகளின் நீளமும் கூடும். அப்படிப்பட்ட நாட்களில் கடல் ஆழத்திலுள்ள பிராணிகள் இப்படி வருவதுண்டு. ஆனால் நீர்ப்பெருக்கம் குறையும் சமயத்தில் அவை தாமாகவே, ஆழத்திற்குள் சென்றுவிடும். ஆனால் இந்த திமிங்கலம், நீர் பெருகியிருக்கும் பொழுது கரை சேர்ந்து சோர்ந்து விட்டது. பின்னர் நீர்மட்டம் குறைந்து விட்டதினால் அதனால் மீண்டும் கடலினுள்ளே செல்ல முடியவில்லை. அதற்குள் அது மீனவர்களிடம் சிக்கிவிட்டது. மேலும் இது சிறிய "குட்டி"யாயிருப்பதால் உடனே நீருக்குள் செல்லும் வலிமையில்லை,' என்றார்கள்

சிறிய "குட்டி"யே சுமார் 40 நீளமும் 3½' உயரம் இருந்து கொண்டு இந்தப் பாடு படுத்தினால், பெரியது எப்படியிருக்கும்?

இறந்த திமிங்கலம் கரை சேர்ந்து காட்சிப் பொருளாயிருந்த அந்த இரண்டு நாட்களில் நகரில் எங்கு பார்த்தாலும் ஒரே 'திமிங்கலக் கதை' தான் "திமிங்கலம் சத்தியத்திற்கு கட்டுப்பட்டது அப்படிப் பட்ட பிராணியைக் கொன்றது பாவம். அதனால் மீனவர் குலத்துக்கே ஆபத்து" என்பதிலிருந்து மனிதனை திமிங்கலம் எப்படி சாப்பிடும் என்பது வரை எல்லாம் பேசப்பட்டது. ஆனால் அவை எல்லாவற்றிலும் குறிப்பிடத் தக்கது, "பிடிபட்டிருக்கும் திமிங்கலத்தின் காதலன் இதைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறது. அது என்றாவது ஒருநாள் இந்த மீனவர்களைத் தாக்கும்" என்பதே.

புகைப்படம்:-

கட்டுரை ஆசிரியரான
வே. இரமணன். (பி. காம்)
வ. உ. சி. கல்லூரி. தூத்துக்குடி

அடுத்த இதழில் !

ஸ்டேஷன் மாஸ்டர் இல்லாத இரயில்வே ஸ்டேஷன்!

டிக்கெட் இல்லாமல் பயணம் செய்வதற்கு 14 வண்டிகள்

இரயிலை நிறுத்த வேண்டுமா? கையைக் காட்டுங்கள் போதும் !

எங்கு ? சென்னையில் !

www.thamizham.net - Free E Books No TM 14719

# இளமையை இழந்து விடாதே!

இ. எஸ். மெர்வின்

"என்னுடைய இளமைப் பருவத்தை மீண்டும் பெறமுடியும் என்றால் அதுவே நான் பெறும் பாக்கியங்களுள் தலைசிறந்தது என்று உறுதியாக நான் கூறமுடியும்" என்று பர்க் அறிஞர் கூறுகிறார். இதையே இன்னொரு அறிஞரும் என்னுடைய வாழ்வில் எத்தனையோ இன்பங்கள் வந்து போய்விட்டன. ஆனால் என்னுடைய இளமையில் கிடைத்த இன்பம் தான் சிறந்தது" என்று உறுதியாக உரைக்கிறார்.

இந்த அளவிற்கு இளமைக்கு சிறப்பு தந்திருக்கிறார்கள். ஆனால் நாம் ......என்ன செய்கிறோம்: மற்ற அறிஞர்கள் போற்றிப் பாதுகாத்ததைப் போல்தான் நாமும் போற்றுகிறோமா? இளமையைப் பற்றி அரிஸ்டாட்டில் கூறும் பொழுது "மகிழ்ச்சி நிரம்பியது; துன்பத்தோடு யாதொரு தொடர்பும் கொள்ளாதது". என்கிறார்.

இளமை தான் சிறந்தது என்று எல்லோரும் கூறுகிறார்கள். இளமைக்கு முதலிடம் அளிக்காத அறிஞர்களே கிடையாது இனிமையான பருவம் இளமைதான்.

இளமை என்பது நாம் விரும்பிய பொழுது அணிந்து கொள்ளும் ஆடையன்று!. சில ஆண்டுகளுக்கு மட்டுமே உடுத்தக் கூடியது. விரைவில் கிழிந்து விடும் தன்மையுடையது என்பதனை அறிந்து அதனை நல்வழியில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இளமையை சரியாக பயன் படுத்தாவிட்டால், அப்புறம் என்னதான் முயன்றாலும் பயன்படுத்திக் கொள்ள முடியாது.

வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகளும், அம்பிலிருந்து புறப்பட்ட வில்லும். கொட்டிய பாலும் மீண்டும் பெறவே முடியாது. இதே போல் தான் இளமையும். ஒரு தடவை இளமையை விட்டு விட்டால் மீண்டும் திரும்பப் பெற முடியாது.

இளமையில் நம்முடைய எண்ணங்கள் பசுமையாக இருக்கும். அந்த பசுமையான காலத்தில் நம்முடைய பணியை செம்மையாகச் செய்திடல் வேண்டும். இளைஞரின் கையில் தான் இந்த நாடே இருக்கிறது என்று எல்லோரும் கூறுகிறோம்; உணர்கிறோம். ஆனால் இளைஞர்க்குரிய இளமை எவ்வாறு பயன் பட வேண்டும் என்று அறிந்து செயல்பட முனைகிறோமா?.

இளமை இனியது; இன்பம் தர வல்லது; அழகியது. அறிவுடையது. ஆற்றல் மிக்கது. தூயது, உண்மையானது. தொன்மையானது வற்றாத வனப்புடன் வாழ்வு கொடுப்பது வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காவது.

இளமை என்பது என்ன என்று தெரிந்துக் கொண்டால் சரியான பாதையில் முறையாகச் சென்று விட முடியும். இளமை துக்கத்துடன் தொடர்பு கொள்வதில்லை. "பெருமையுள்ள செயல்கள் அனைத்தும் அநேகமாக இளைஞர்களாலேயே செய்யப்பட்டிருக்கின்றன". என்று கூறுகிறார் சினரே.


www.thamizham.net - Free E Books No TM 14719

இளமையுடன் இருக்கும் பொழுதே நம்முடையக் கடமைகளை கண்ணியமாகச் செய்திட வேண்டும். இளமையை உதறி விட்டால் அதுவும் நம்மை உதாசீனப் படுத்தி உதறித் தள்ளிவிடும். இளமையில் விருப்பம்போல் துள்ளினுல் முதுமையில் விழுந்து விட வேண்டும்.

ஒரு நிலம் எவ்வளவு தான் வளமுடையதாக இருந்த போதினும் அதனை உழுது பயிரிடாமல் தரிசாக விட்டுவிடின் அதில் எவ்வித பலனும் ஏற்படாது போய் விடுமோ அதே போல் தான் இளமையை பயன் படுத்தாவிட்டால் எதற்கும் பயனில்லாமல் போய் விடும்.

கிறார். இளமையில் நம்மிடம் இருக்கும் கெட்ட பழக்கங்களை விட்டொழித்து விட வேண்டும். இளமையில் செய்யும் தவறுகள் என்றென்றும் வாழ்க்கையில் நிலைத்து நின்று விடும்.

மது இல்லாமலே வெறிகொள்ளச் செய்வது இளமை'' என்று கதே அறிஞர் கூறுகிறார். ஒரு பாதிரியார் தன்னுடைய இளமையில் பார்க்கக் கூடாத படங்களை பார்த்து விட்டார். பாதிரியான போதும் கூட அக்காட்சியின் நினைவு தன்னை விட்டு போகும்படி இறைவனிடம் பல தடவை கேட்டும் பயனில்லாமல் போய் விட்டது.




அவர் இளமையில் பார்த்த காட்சி வாழ்க்கை முழுவதும் இருந்திருக்கிறது அல்லவா? இளமையில் எதுவும் பசுமரத்தில் அடிக்கும் ஆணி போல் பதிந்து விடும். பட்ட மரத்தில் அடிப்பதை விட பசுமரத்தில் ஆணி அடிப்பது எளிதாக இருக்கும். இளமையில் தான் நாம் மிகவும் முன் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

சலவைக்கல் உயர்ந்தது தான், உன்னதமானது தான் அழகானது தான், ஆனுல் அதைக் கட்டிய சிற்பியின் கைத்திறனும் மனத்திறனும்சேர்ந்து தான் தாஜ்மகாலாக ஒளி வீசுகிறது.

''அடக்கமும் அறிவுடைமையும் முதுமையைத் தழுவி நிற்பது போல முரட்டுத்தனம் இளமையைச் சார்ந்து நிற்கிறது'' என்று ஒருவர் கூறு

இளமை என்ற சலவைக் கல்லுடன் மனத்திடமும் அறிவுத்திற

www.thamizham.net - Free E Books No TM 14719

அழகுள்ள பெண் ஆனந்தப்பட ஆரம்பித்தால் பணப்பை கண்ணீர் விட ஆரம்பிக்கும்.

—ஆங்கிலப் பழமொழி

னும் சேர்த்துக் கட்டினுல் தான் தாஜ்மகால் போன்ற வாழ்க்கையை அமைக்க முடியும். இல்லையேல் ...... எவருமே அறியாதபடி எங்கோ கிடக்கும் சலவைக் கல்லைப் போல் நம்முடைய இளமையும் வீணுகிவிடும்.

"உங்களுடைய இளைஞரின் இதயத்தை கவர்ந்துள்ள எண்ணம் எது என்று கூறுங்கள். அடுத்த தலைமுறையின் ஒழுக்கம் எதுவாக இருக்கும் என்று நான் கூறுகிறேன்" என்று கூவல் விடுகின்ருர் பார்க்.

வாழ்க்கை என்ற தடாகத்தில் இளமை என்ற தாமரை மலர் மலர்ந்து மணம் வீசும்படி இருக்க வேண்டும். இளமை என்றும் இருக்காது அப்படி இளமை நம்மிடம் இருக்கும் பொழுதே அதனை பயன் படுத்திக் கொள்ள வேண்டும். இளமை நம்முடையதே!

இந்த அமைப்பை ஒவ்வொருவரும் உணர்ந்து செயலாற்றினுல் செம்மையாக வாழ்க்கை அமைந்துவிடும். இளமையை நாம் கையாளும் விதத்தில் தான் இனிமை இருக்கிறது. இளமையை இழந்து விடாமல் இன்சுவை பெருகும்படி வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.

—0—

செங்குத்தான பாறையில் ஏறும் போது அவசரப் படக் கூடாது. மெல்ல மெதுவாக ஏற வேண்டும்.

— சேக்ஸ்பியர்


# மாணவர் தமிழ் உரை
# புகுமுக வகுப்பு 1970

பேராசிரியர் **ரா. சீனிவாசன்,** எம். ஏ., எம். லிட்.

கருத்துச் செறிவும் தூய நடையும் நயங்களும் அமைந்து செய்யுளுடன் விளக்கவுரை, வினு-விடை, உரை நடை, துணைப் பாடக் கட்டுரைகள் அடங்கியது.

**அணியகம், சென்னை-30**


www.thamizham.net - Free E Books No TM 14719

ஒரே தலைப்பில் திங்களுக்கு ஒரு கதை

# பூச்செண்டு


ஆசிரியர் குழுவிலிருந்து

**அ. மா. சீ. செயினுலாபுதீன்**

*பச்சையப்பன் கல்லூரி*


திருமண ஊர்வலம் புறப்பட்டு விட்டது. எங்கு நோக்கினும் இன்பக் கிளுகிளுப்பு. எல்லார் முகங்களும் மகிழ்வு ரேகைகளைப் பிரதிபலித்த வண்ணம், ஊர்வலத்தைத் தொடர்ந்த வண்ணமிருந்தன. ஆனால்...!

அவன் சிரிக்கவில்லை. சிரிக்க முடியவில்லை. பக்கத்தில் அமர்ந்திருக்கும் 'தன்'னவளைப் பார்க்கின்றான். கடைக்கோடியில் வெட்கம் மேவிடத் தலையைக் குனிகின்றாள் அவள்.

ஊர்வலம் சென்று கொண்டிருக்கின்றது.

சுற்று முற்றும் பார்க்கின்றான். அதோ அவனுடைய அம்மா காலக் கணக்கன் தன் கணக்குகளை மறந்து விடுவோமோவென அவளுடைய கன்னத்தில் சில கோடுகளை விட்டிருந்தான். அவனைப் பார்த்தவுடன் அவளும் தன் கண்களை வேறு பக்கம் திருப்பிக் கொள்கின்றாள். புடவைத் தலைப்பையெடுத்துத் தன் கண்களை ஒற்றிக் கொள்வதையும் அவன் பார்க்கத் தவறவில்லை, என்றாலும் அவனுடைய பார்வைச் சுற்றுமுற்றும் அலைகின்றன. எதைத் தேடுகின்றனவோ, அவன் கண்கள்!

தன்னையே ஒருமுறை பார்த்துக் கொள்கின்றான். புத்தம் புதிய வேட்டி சட்டை கழுத்திலே 'தங்கச் சங்கிலி'யோடு இழைந்து நிற்கும் மணமாலைகள்! - கையில் வாடிய பூச்செண்டு!.

கண்கள் பூச்செண்டையே வெறித்து நோக்குகின்றன. கண்கள் குளமாகின்றன. எண்ணத்தின் எங்கோ, ஒரு மூலையில் துளிர்த்த ரத்தத் 'துளிகள் கண்ணில் பரிணமித்து பூச்செண்டில் விழுந்து தெளிக்கின்றன. அவன் வாய் எதோ முணுமுணுக்கின்றது..

'அக்கா' அவனையறியாமல் துன்பத்தின் கீற்றுக்கள் இழையோட அவன் முணுமுணுக்கிறான்.

❖ ❖ ❖

கனிந்துதிர்ந்த முத்துத் துளிகளாய் வியர்வை முகத்தில் துளிர்க்கத், தன் முன் வந்து நிற்கும் தன் சகோதரியைப் பார்க்கிறான் அவன். எண்ணத்தின் எங்கோ ஒரு மூலையில் தடம்புரண்ட நினைவலைகளை

www.thamizham.net - Free E Books No TM 14719

அடக்க முயன்றும் முடியாதவஞ கத் தன்னுணர்வினை அதுவடிக்கும் கண்ணீரை எண்ணி உள்ளம் குமை கின்ருன்.

சின்னஞ் சிறுமலராய்ச் சிங்கார நறுமலராய் வண்ண எழில் கூட்டி வளையவர வேண்டிய வயதில். இப் படியொரு 'கைம்மை' வேதனை. அது இயற்கையளித்தது என்ருலும் அதைத் தாங்கிக் கொள்ள அவள் பழகி விட்டிருந்தாள். அவனும் பழக்கப் படுத்தப்பட்டவஞக இருந் தான்.

முயன்றும் முடியாத நிலை. நுனிக் கரும்பைத் தின்றுவிட்டு முகம் சுளிக்கும் குழந்தையின் நிலையில் தான் அவன வாழ வேண்டியிருந் தது. என்ன செய்வான் பாவம்! அவனும் மனிதன் தானே! உடலில் அரிப்பு ஏற்பட்டால் அவஞல் சொரிந்து கொள்ள முடியும்! ஆஞல் உள்ளத்தில் அல்லவா அவனுக்கு அரிப்பு!.

'தம்பி' என்று அன்போடு அவள் அழைக்கும் அந்த அழைப்பொலி காலைக் கதிரவனைக் கண்டு குது



தூய பெண்ணிடம் ததும்பும் அழகு தொலைவில் இருக்கும் நெருப்பு அல்லது கூர்மையான போர்வாள் போன்றது. அதாவது கிட்டே நெருங்காத வரை யாரையும் காயப்படுத்தாது.

—செவராண்ட்ஸ்

ஆஞல் இடையில் ஏற்பட்ட நினைக்கவே நெஞ்சம் அதிரும் அந்தக் கொடூரம்...! அம்மை வார்த்ததும் அதஞல் அவள் கண்கள் பறிக்கப் பட்டதும்!

நினைக்க நினைக்க அவன் உள்ளம் வேதனையால் துடித்தது. மறக்க

கலிக்கும் பறவையினங்களின் ஒலி யாக அவன் நெஞ்சில் இனிக்கும்! இவ்வளவு நடந்தும் மகிழ்ச்சியாகத் துள்ளித்திரியும் தன் 'அக்காண்ணி' தன்மையை யெண்ணி வியக்காத நாளே கிடையா தெனலாம்.

காலையில் எழுந்தவுடன் தான்

www.thamizham.net - Free E Books No TM 14719

நட்ட மலர்ச் செடியில் என்னென்ன மலர்கள் பூத்திருக்கின்றன என்று தொடுவுணர்ச்சியால் உணர்ந்து பறிந்துக் கொண்டு வந்து, 'அம்மனுக்கு மகிழ்ச்சியுடன் படைக்கும் அந்த நிகழ்ச்சியை எண்ணும்போது!

உலகத்தின் மீதேதான் மனத்தின் தொழிற் கூடம் அமைந்துள்ளது. மனத்தின் மீது தான் உலக மக்களின் தொழிலுலகம் அடங்கியுள்ளது என ரவீந்திரர் கூறியது எவ்வளவு பொருந்தும். இவ்வாறு எண்ணிய அவன் நெஞ்சின் மூலையில் துக்கரணம் குறைந்த பாடில்லை. எப்படி முடியும்?

ஒடுகின்ற தண்ணீர் ஒடிக் கொண்டேயிருந்தால்- பாடுகிற அருவி பாடிக் கொண்டேயிருந்தால், பரவாயில்லை. இடையே கற்கள் அணைகள். அதனால் மின்சாரம்- பேய் பிசாசு போன்ற ஒலிகள் எப்படி அவனால் மகிழ்ச்சியாக இருக்க முடியும்! அமைதியாகத் தான் இருக்க முடியும்?.

அணையத் துடிக்கும் விளக்காக வளையவரும் தாயின் ஆசையை அவன் நிறைவேற்ற வேண்டியிருந்தது. என்ன செய்வாள் அவளும்? பெண்ணுக்குத் தான் இப்படியாகி விட்டது. பையனுக்காவது செய்து பார்க்க ஆசைப்படாத தாயின் உள்ளம்.

எத்தனையோ நாட்கள் வாரங்கள்- மாதங்கள் அவனும் மறுத்துப் பார்த்தான்.

---




## பெண்கள் ஏலம்!

ஜெர்மனியில் 'ரைன்லாண்ட் என்ற' இடத்தில் பெண்கள் ஏலம் விடப் படுகிறார்கள். வியப்பாக இருக்கிறதா? 18 வயது குமரி முதல் 80வயது கிழவி வரை ஏலமிடப் படுகிறார்கள். திருமணமாகாத ஆண்களே பங்கு பெறும் இந்த ஏலம், வசந்த கால இறுதியைக் குறிக்கும் விழாவிற்காக நடைபெறுகிறது. அதிக ஏலத் தொகை கேட்டவர்கள் 'மே மாத ராஜா, ராணி' ஆவார்கள். ஏலத்தில் எடுக்கப்பட்ட பெண்ணுடன் விழா முடியும் வரை நடனத்திலும் ஊர்வலத்திலும் பங்கு பெற வேண்டும். ஏலத்தில் வந்தவளுடன் தவறி நடத்தால்—மூச்! கன்னம் வீங்கி விடும். இந்த மாதிரியான விளையாட்டு ஏலத்தில் இளம் பெண்களுக்கு மட்டுமல்ல, கிழவிகளுக்கும் ஏராளமான கிராக்கியாம்!

—(யூ. பி. எஸ்.)

---

www.thamizham.net - Free E Books No TM 14719

'தம்பீ'- வண்ணக் குமிழாக வாய் திறந்து அழைத்தாள் அவள்.

'அக்கா'!

சற்று நேரம் அமைதி. பின்பு தெளிவு பெற்றவளாக'

'அம்மா சொல்றபடி நடந்துக் கப்பா...;'

அவனால் பேச முடியவில்லை. கண்களிருந்து வடியும் கண்ணீரை அவனால் துடைக்கவும் முடியவில்லை.

'ஏம்பா அழறே, நான் சொன்னது தவறு!' கண்களைத் துடைக்க நெருங்கும் அக்காளை வெறித்து நோக்குகின்றான் அவன். அவனால் முடிந்தது அவ்வளவுதான்!- தான் அழுதது புரிந்தது கூட அவனுக்கு வியப்பாக இருந்தது.

'ஏம்பா' என்னைப் பற்றிக் கவலைப் படுகிறாயா?.

'ஆம்' என்பது போல் தலையை மேலுயர்த்தித் தாழ்த்துகிறான்.

சிரிக்கின்றாள் .. அவள் சிரிக்கின்றாள்... விரக்திச் சிரிப்பாக வேதனைச் சிரிப்பாக இருக்கலாம். என்றாலும் அங்கே உயிர்த்துடிப்பு இருந்தது.

---

யாரும் அழுகால் வாழ முடியாது அதற்காக உயிரை விட வேண்டுமானால் முடியும்

—அமெரிக்க அறிஞர்

---

தம்பீ, என்னைப் பற்றி கவலைப்பட வேண்டியதேயில்லை. நீ படித்தவன் உனக்கு அதிகம் சொல்வதாக எண்ணாதே! சேக்ஸ்பியரின் டெம்பஸ்ட் படித்திருப்பாய். டெம்பஸ்ட்டில் வெளி இயற்கை 'ஏரியல்' மூலம் மனித உருக் கொண்டிருக்கின்றது. ஆனால் மனத்திற்குறிய இதயப் பான்மையை விட்டு ஒதுங்கியே நிற்கின்றது அது. மனிதனிடம் அதற்குள்ள தொடர்பு. வெறும் ஏவலைப் புரிவனைப் போன்றதாகும். அது விடுதலையை விரும்கின்றது. ஆனால் மானிடரின் சக்தி அதை அடக்கி ஒடுக்கி அதன் வாயிலாகத் தன் காரியங்களை நிறைவேற்றிக் கொள்கின்றது. அதன் இதயத்தில் சிறிதேனும் அன்போ கருணையோயில்லை பிராந்தாவின் பெண் உள்ளம் கூட அதன் மீது இரக்கம் காட்டவில்லை. பிராஸ்பரோவும் பிராந்தாவும் நீவைவிட்டு என்றென்றுமே அகலும் போது விடை பெற்றுக் கொள்ள இந்த 'ஏரியல்' ஒரு குளிர்ந்த பேச்சைக் கூடப் பேசவில்லை இதிலிருந்து உனக்கு என்ன தெரிகின்றது...

அவன் அவளையே பார்த்த வண்ணமிருக்கிறான். அவளுடைய தெளிந்த அறிவை எண்ணி வியப்பு மேலிடப் பார்த்தவனாக இருக்கிறான்.

'உனக்குப் புரியவில்லையா'? - நானே சொல்றேம்பா அந்த 'ஏரியலை'ப் போல்தாம்பா... நம்ம பாரதத்துப் பெண்கள். எங்களிடம் அன்பு. அமைதி நற்பண்பு இவையெல்லாம் மிளிர்ந்தாலும் கூட சமுதாயத்தால் அடக்கப் பட்டவர்கள்!. இதற்கு மேல் நான் என்ன கூறமுடியும்! அதற்கு மேல் உன் விருப்பம்!- நான் வருகிறேன்!.

அக்கா!'... கண்களைத் துடைத்த வண்ணம்... அவளை நெருங்கி,

www.thamizham.net - Free E Books No TM 14719

அக்கா... அம்மா விருப்பம் போல் நடந்துக்கறேன்.

'தம்பீ!'- அங்கே இரண்டு மலர்கள் ஒன்றை யொன்று பாசமிகுதியால் தழுவிக் கொண்டன.

❖ ❖ ❖

ஊர்வலம் ஊரின் தெருக் கோடிக்கு வந்து விட்டது. ஆரவாரமும் கரகோசமும் மிகுதியானதால் தன்னுணர்வு பெற்ற தன்னிலையை யடைக்கின்றான் தான் இதுவரை கண்ட உணர்ந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் எண்ண எண்ண அவன் கண்கள் பனிக்கின்றன. ஊர்வலம் முன்னேறிச்சென்று கொண்டிருந்தது. ஆனால் அவன் உள்ளம் மீண்டும் பின்னேகிக் விரைந்தது.

❖ ❖ ❖

நாளை மறுநாள் திருமணம். திருமண வேலைகள் அமக்களப் பட்டன. கண்தெரியாத அந்த நிலையிலும் அவனுடைய அக்காள் ஓயாதபடி வேலை செய்ததைப் பார்த்த அவன் உண்மையிலேயே பூரித்துப் போனான். என்றாலும் எங்கோ ஒரு மூலையில் ஒரு முள் குத்திக் கொண்டு தான் இருந்தது.

'அக்கா...'

'ஏம்பா...'

'நீங்களும் ஏன் துன்பப் படறீங்க' அம்மாதான் பார்த்துக்கறுங்களே.

'டேய்- ஏது அதுக்குள்ள... நாளைக்கு மனைவி வந்துட்டா என்னைப் பேசக்கூட விடமாட்டே போலிருக்கே...!'

'அப்படியில்லே அக்கா... சரி... எனக்கு என்னக்கா பரிசு தருவீங்க.!,

'பரிசா..' தன் வாயைப் திறந்து அவள் கேட்டதே அழகாக இருந்தது அவனுக்கு.

சற்று நேரம் யோசித்தாள்., பின்னர்... ஆ நினைவு வந்து விட்டது!. நம்ம தோட்டத்து மலரில் உனக்கு ஒரு 'பூச்செண்டு' மகிழ்ச்சிதானே!'

மகிழ்ச்சியால் அவன் கண்கள் கலங்கின.

திருமண நாள்.

வீட்டின் முன்பக்கம் ஒரே கும்பலும் கூச்சலுமாக இருந்தது.

வீட்டின் புறக்கடையில் அன்றலர்ந்த மலர்களை யெல்லாம் இணைத்துப் 'பூச்செண்டு' செய்து கொண்டிருந்தாள் அவள்.

எல்லா வேலையும் முடிவுற்றது. ஆனால் இறுதியில் கட்டுவதற்கு கயிறு (நார்) சற்றுக் குறைந்தது.

அவள் சென்று, பல இடங்களிலும் தேடி இறுதியில் தோட்டத்தின் ஒரு ஓலையில் கையை வைத்தாள்.

'அம்மா' 'வீ'லென்று ஒலி கேட்டு ஓடி வந்தனர் வீட்டிலுள்ளோர்,

மயங்கிய நிலையில் கையில் பிடித்த 'பூச்செண்டு'டன் கிடந்தாள் குமாரின் தமக்கை வந்தவர்கள் அங்கு போய்க் கொண்டிருந்த நல்ல பாம்பொன்றைக் கண்டு 'பாம்பு' 'பாம்பு' என்று கத்தினர்.

---

அறிவை ஆக்க வழியில் செலுத்துகிறவன் நல்ல முடிவை அறிய நாளாகும்— அறிவை அழிவு வழியில் செலுத்துகிறவன் கெட்ட முடிவை அறிய வெகு நாளாகாது.

— இரவி.

www.thamizham.net - Free E Books No TM 14719

பாம்பு மறைந்தது. உயிரும் மறைய மன்றாடிக் கொண்டிருந்தது. செய்தி கேட்டு ஓடி வந்தவன் கையில் பூச்செண்டுடன் கிடந்த அக்காளை நோக்கினன்.

அவள் இதழ்க்கடையில் சிரிப்பு மிளிரப் 'பூச்செண்டை' உயர்த்திப் பிடித்தாள். அவன் அதை வாங்க அவள் கை சோர்ந்தது. ஆமாம் அவனுக்கென்று இருந்த ஒரு கோயில் அழிந்து விட்டது. அவனுக்கென்று மணம் கமழ்ந்த ஒரு மலர் வாடிச் சருகாகி விட்டது. அவனுக்கென்று ஒளியுமிழ்ந்த ஒரு தீபம் அணைந்து விட்டது.

ஊர்வலம் மணப்பந்தலை அடை



யும் தருவாயை அடைந்து விட்டது.

தமக்கையின் மரணத்தால் திருமணத்தைத் தளர்த்தியதும் பின்னர் பலரின் நச்சரிப்புகளால் மணவிழாவிற்கு ஒத்துக் கொண்டதையும் எண்ணிப் பார்க்கிறன்.

எத்தனை நாள் சென்றாலும் வாடிச் சருகான இந்தப் பூச்செண்டை' அவன் விடவில்லை.

இதோ ஊரார் பேசுவது அவனுக்குக் கேட்கத்தான் செய்கிறது 'எவ்வளவோ செலவழித்துத் திருமணம் செய்கின்றார்கள் ஒரு 'பூச்செண்டு' புதிதாக வாங்கக் கூடாதா?'

அவர்களுக்கு என்ன தெரியும்!.

தூய எண்ணமெனும் மலர்களால் தொடுக்கப்பட்ட 'பூச்செண்டு' அது வென்று.

என்னதான் என்றாலும் ஓர் அமைதி 'அக்கா எங்கேயிருந்தாலும் இந்தப் 'பூச்செண்டு' வடிவில் உடனிருந்து நடத்திக் கொள்வாள்' என்ற நம்பிக்கை அவனுக்கு.

அதில் அவனுக்கென்ன யாருக்குமே சந்தேகம் இல்லை.

அவன் எங்கே நடந்தாலும் எந்த வழியாக இருந்தாலும் அங்கெல்லாம் செல்லும் வழியெல்லாம் பூச்செண்டையும் எடுத்துப் போய் வருவான்.

கடந்து விட்ட காலத்தின் கனவின் கதவுகளை மெல்லத் தொட்டு விலக்கித் தன் அக்காளின் தோட்டத்தைப் பார்த்திருப்பான்!

அவன் என்றாவது எரிந்து மறைந்தாலும் இருளோடு நடந்தாலும் கவலையைத் துடைத்துக் கொண்டு காரிருட்டுத் தொடு வானில் கண்களைத் தூது விட்டுக், கண்ணீரின் திரைவிலக்கிக் காத்திருக்கத்தான் செய்வான்!

அவனுடைய நெஞ்சின் ஆறுதலுக்காக அவன் நெடுந்தூரம் சென்று நிலத்தில் புதைந்தாலும் திசைமுடிவில் பொன்வண்ணச் சிறு மேகமாய் அந்தப் 'பூச்செண்டு' அவனுடனேயே இருக்கும்!. ※

www.thamizham.net - Free E Books No TM 14719

திருமணம் செய்து கொண்ட பின்பே மாலை நேரக் கல்லூரியில்
பயின்று பி. ஏ முடித்த இம்மாணவர் பாலகிருட்டினன்
விரும்புவது எம். ஏ. முடித்து ஆசிரியராக
பணிபுரிய வேண்டும் என்பது.

இவர் கூறுகிறார்

இன்பமே திருமணத்திற்கு பிறகு தான் என்று

ஆகவே,

# துன்பம் தொடர்வது எப்போது?

(பி. பாலகிருட்டினன்)

வாழ்க்கையில் துன்பம் எப்போபது? தொடர்கிறது என்பது கேள்வி இல்வாழ்க்கையில் நுழையும் போது என்பது பதில். இந்தக் கேள்வியும் பதிலும் கடந்த மாத பூச்செண்டு இதழில் வெளியானவை. இந்தப் பதிலைப் படித்த அளவில் ஒருவிதக் கிளர்சி ஏற்படுகிறது. இல் வாழ்க்கையில் நுழையும் போதுதான் வாழ்க்கையில் துன்பம் தொடர்கிறதா என்ற வினு இயல்பாகவே எழுகிறது. இல்வாழ்க்கையில் நுழையும் வரை மனித வாழ்வு மகிழ்ச்சி நிறைந்த இன்ப ஊற்ருக இருந்து இல்வாழ்க்கையில் நுழைந்தவுடன், இந்த இன்ப ஊற்று வற்றித் துன்பம் தொடர்ந்து விடுகிறதா?

இல்வாழ்க்கைத் துன்பத்தின் தொடர்ச்சியானுல் அதை எவரேனும் ஏற்பரோ? அந்த முறையான வாழ்க்கையை மாற்றி அமைக்கச் சமுதாயம் முயன்று விடுமே! அறம் வகுத்த சான்ருேர்களும், அறத்தினுள் தலையாத அறம் இல்லறம் என்று கூறியிருக்க மாட்டாரே! "இல்லறமல்லது நல்லற மன்று" என்று ஔவை பாடியிருப்பாரா? இல்வாழ்க்கை மனித சமுதாயத்திற்கு ஏற்ற ஒரு அமைப்பாக இருப்பதாலேயே, உலகமெங்கும் இல்வாழ்க்கை முறை பின்பற்றப்பட்டு வருகிறது, என்பதில் ஐயம் இல்லை.

மனிதன் தன்னை உணர்ந்து விலங்கினங்களிலிருந்து வேற்றுமைப் படுத்திக் கொண்ட நாளிலிருந்து தனக்கென ஒரு வாழ்க்கை முறையையும் வகுத்துக் கொண்டான். அந்நாள் மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தான். இன்ருே இயற்கைச் சக்திகளைப் பயன் படுத்தி அறிவியலைத் துணைக் கொண்டுச் செயற்கை வாழ்க்கை நடத்துகிருன் மனிதன். ஆனுல்

www.thamizham.net - Free E Books No TM 14719

இவ்விருபேரும் மங்கையொருத்தியின் கரம் பற்றி மனையொன்றில் குடி புகுந்து, இல்வாழ்க்கையில் ஈடுபடுவதையே காண்கிறோம். நக்கீரர் கூற்றுக் கேற்ப ஒத்த கல்வியும், ஒத்த பண்பும் ஒத்த குணமும் கொண்ட ஒருவனும் ஒருத்தியும்; ஒத்த மனத்தோடு ஒன்று பட்டு நடத்தும் இல்வாழ்க்கை இன்பமயமானது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இருமனமும் ஒருமனமாகும் இன்ப ஒருமைப்பாட்டை இல்லறத்தில் அல்லாமல் வேறெங்கு காணமுடியும்?

ஏட்டையும் பெண்கள் தொடுவது பாவம் என்பது இடைக் காலத்தே தோன்றியது. அது இன்ப வாழ்க்கை நெறியன்று.

நல்லற வாழ்க்கையாகிய இவ்வில்லற வாழ்க்கை துன்பத்தின் தொடக்கமாக இருக்க முடியுமா? வள்ளுவர் கூறுகிறார் இல்லறத்தில் காணும் இன்பத்தினை விண்ணுலகிலும் காண முடியாதென்று.

"தாம் வீழ்வார் மென்தோள் துயிலினிது கொல்
தாமரைக் கண்ணானுலகு".

தாமரைக் கண்ணான் உறையும் வீட்டுலக இன்பத்தை விட, ஒத்த பண்பும் ஒத்த மனமும் கொண்ட கணவன் மனைவி காணும் இன்பம் சிறந்தது. அத்தகைய இன்ப வாழ்வாகிய இல்லற நெறியில் பொருந்தி நிற்பவன் "வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்". என்று சிறப்பிக்கப் படுகிறான்.

தலைமகனும் தலைமகளும் அறிவின் துணைக் கொண்டு, அன்பின் வழிநின்று, நல்லறமாகிய இல்லறத்தினை நடத்தினால் பூசலுக்கும், பிணக்குக்கும் அங்கே இடமில்லை. துன்பத்தின் நிழல்கூட அங்கு தங்காது. அதுவே மங்கலம் நிறைந்த மனை. இன்பமயமான இல்லறம்.

பண்பாகிய அன்பும், பயனாகிய அறனும் பயக்கும் இல்வாழ்க்கைத் துன்பத்தின் தொடர்ச்சி அல்ல. அது இன்பத்தின் தொடக்கம். மகிழ்ச்சியின் பூங்கா. அறக்கலன், வீடு பேற்றினும் விழுமியது. தமிழனின் தனிப் பெரும் வாழ்க்கை நெறி தமிழ் மறை உவந்தளிக்கும் அருட்பெரும் நெறி. அதுவே இன்ப ஊற்றாகும் இல்லற நெறி.

—o—

**எந்தக் காரியத்தையும் உற்சாகத்தோடு செய்பவன் தன் நோக்கத்தை அடையத் தவறுவது இல்லை.**

—வால்மீகி.

www.thamizham.net - Free E Books No TM 14719

# பிரட்டோ சுண்டல்!

அப்பாலோ 11 விண்வெளி விமானி ஆல்டிரின் அம்புலித் தரையில் நடக்கிறார். அவரது பார்வை முகப்புக் கண்ணாடியில் தெரியும் உருவங்கள், தலைமை விமானி ஆம்ஸ்ட்ராங் பிம்பமும் நிலா வாகனத்தின் பிம்பமும் ஆகும்.


இது 20 நூற்றாண்டின் அதிசயம் தான். ஆனால் என்னளவில் வியப்பாகவோ சுவையாகவோ இல்லை.

புரியவில்லை?
இங்கு,
இந்தியாவில்,
சென்னையில்,

மண்ணடியில் உள்ள ஒரு உடுப்பி ஹோட்டலில் பிரட்டையும் (ரொட்டி) சுண்டலையும் சேர்த்து 'பிரட்டோ சுண்டல்' என்ற ஒரு பதார்த்தத்தை தயாரித்திருக்கிறார்கள். ஆஹா......என்ன சுவை!

அமெரிக்கர் எந்த அளவுக்கு முன்னேறினாலும், நமது முன்னேற்றம் தடைபடுமா? இப்படியே மு(ர)ன்னேறிச் செல்வோம்.

'ரீத்தா'





www.thamizham.net - Free E Books No TM 14719

# பாடகனின் நெஞ்சம்

சீ. சாகுல் அமீது பி. ஏ.,
தமிழ்த் துறை,
புதுக் கல்லூரி.

நான அரவணைப்பில்- பிறந்த
மோன மதுநினைப்பில்- மின்னும்
நாட்டியச் சிந்தனை ஒப்பனை கூட்டியே
நாடகம் ஆடிடும் மேடை- இது
பாடகனின் நெஞ்ச ஓடை

வெறியில் ஊறியதாய்- வரி
வரியாய்த் தேறியதாய்- உண்ண
வீரம் விளைத்திடும் போதை நிரம்பிய
வேகம் கவிதையாம் கிண்ணம்- இது
தாகம் தணித்திடும் சின்னம்.

கோழைக் குணம்நொறுங்க- இன்பம்
ஏழை இனம்நெருங்க- நெஞ்சில்
கொதித்த தமிழின்று குதித்துக் கவிதையாய்க்
கொண்டதடா உயிர்க்கோலம்- சுரம்
கண்டதடா பழங்காலம்.

உதைத்துக் களிப்பவரின்- நாம்
கொதிக்கக் குளிர்பவரின்- நெஞ்சை
உடைக்கும் படைக்கலன் கொடுக்கும்
உலைக்களம்
ஊக்கந் தருமிந்தப் பாட்டு- உன்
ஏக்கம் தவிர்த்திடு கேட்டு.

கற்பனைச் சொர்க்கமடா- இது
கனியின் வர்க்கமடா- இதில்
காணும் கவிதைகள் மானுடத்தை யதன்
கதியில் உயர்த்துமடா- நம்
கனவை நிகழ்த்துமடா.

www.thamizham.net - Free E Books No TM 14719

மருத்துவம்

# சர்க்கரை நோயுள்ளவர்களின் பார்வைக்கு...

மரு. சு. முத்துசாமி எம். பி., பி. எஸ்.

சர்க்கரை நோயை ஏதோ தமது பரம் பரைக்கே ஏற்பட்ட சாபக்கேடாகக் கருதி யாரும் சலிப்பும் வெறுப்பும் கொண்டு வாழ்வை வறட்சியாக்கிக் கொள்ள வேண்டியதில்லை.

"A Diabetic who Knows Most Lives Longest" என்று சொல்லுவார்கள். ஆமாம்! அறிவுள்ள நோயாளியின் ஆயுள் அதிகம் நீடிக்கும் என்பதில் ஐயமில்லை.

சர்க்கரை நோயுள்ளவர்கள் சர்க்கரைப் பொருள்களையே சாப்பிடக் கூடாது என்பது அறிவற்ற பழங் கொள்கை. அவர்கள் மாவுப் பொருளின் அளவை குறைத்துக் கொண்டால் போதும்.

1. உணவு முறை
2. உடற் பயிற்சி
3. இன்சுலின்

இவை மூன்றும் முறையே பின்பற்றப் பட வேண்டியன.

1. **உணவு முறை:-** வயதுக்கும் உயரத்திற்கும் தகுந்த அளவில் உணவின் அளவு அமைய வேண்டும்.

மனிதனின் சராசரி எடை: உயரம் (அங்குலத்தில்) × மார்புச் சுற்றளவு (மூச்சு உள்ளிழுக்கப்படும் பொழுது அங்குலத்தில்) ÷ 17

இந்த எடையளவுக்கு தேவையான உணவு கொள்ளல் வேண்டும். இப்படி உண்பதால் ஒல்லியானவர்கள் தடிக்கவும், ஊதிப்பருத்தவர்கள் இளைக்கவும் செய்வார்கள்.

---

**நாளை செய்ய வேண்டியதை இன்று செய்து விடு. மாலையில் செய்ய வேண்டியதை காலையிலேயே செய்து விடு.**

—மகாபாரதம்

---

www.thamizham.net - Free E Books No TM 14719

சுமார் 150 பவுண்டு எடையுள்ள ஒருவன்,

1. 150 கிராம் புரதம்
2. 50 கிராம் கொழுப்பு
3. 150 கிராம் மாவுப் பொருள்

இவை கலந்த உணவு உட்கொள்ளலாம். இதனால் பசியடங்காதவர்கள் கலோரி மதிப்பற்ற உணவுப் பொருள்களைக் கலந்து கொள்ளலாம் .அவற்றால் பசியடங்கும். ஆனால் வெப்பசக்து வெளிப்படாது. மேற்கூறிய நிலையில் அமைந்த உணவு அட்டவணை இதோ:—

காலை 6 மணி: காபி 6 அவுன்சு (பால் 3 அவுன்சு மட்டுமே இருத்தல் வேண்டும்) காப்பிக்கு சர்க்கரை போடக் கூடாது. சாக்கரின் என்ற இனிப்பு பொருளைப் பயன்படுத்தலாம்.

காலை 8 மணி: 1. கோதுமை பூரி 2 அல்லது 3. காய்கறிகள் சேர்த்துக் கொள்ளலாம் ஆனால் உருளைக்கிழங்கு கூடாது.

(அல்லது)

2. கோதுமை உப்புமா சிறிய அளவில் (அல்)
3. கேழ்வரகு கஞ்சி 8 அவுன்சு (அல்)
4. 2 இட்டலிகள் (வாரத்தில் ஒரு நாள் மட்டும்) (அல்)
5. இரண்டு ரொட்டித் துண்டுகள் - சிறிதளவு வெண்ணையுடன்.

இந்த 5-ல் ஏதாவது ஒன்று 6 மணிக்கு உட்கொண்டது போல், காப்பியும் கொள்ளலாம். ஒரு முட்டையும் சேர்த்துக் கொள்ளலாம்.

காலை 11 மணி:-
1. தக்காளிப் பழம் ஒன்றிரண்டு
2. வெள்ளரி ஒன்றிரண்டு
3. வேகவைத்த 'காலி'ப்பூ (Cauli-Flower)
4. மோர் 1 டம்ளர் (10 அவுன்சு)

மதியம் 1 மணி:-
1. அரிசி உணவு (2 அவுன்சு அரிசி)
2. நெய் (கால் அவுன்சு)
3. பருப்பு (2 அவுன்சு) அல்லது மீன் அல்லது இறைச்சி (2 அவுன்சு)
4. காய்கறிகள் 8 அவுன்சு
5. மோர் 1 டம்ளர்.

---

## ஆடை = அசௌகரியம்

முதலில் உடலை மறைப்பதற்காக ஆடை. இடையில் நாகரீகத்திற்காக. இப்போழுது அசௌகரியத்திற்காக [உ-ம்.] டைட்பேண்ட் மினி சாரி...

மா. கு. சரஸ்வதி, மாடன்வலசு

www.thamizham.net - Free E Books No TM 14719

◎ சென்னையின் ஜனத் தொகையில் 50% நடை பாதைகளில் வாழ்கிறார்கள்

மாலை 5 மணி: 1. பிஸ்கட் ஒன்றிரண்டு, அல்லது 1வடை.
2. சாத்துக்குடி ஒன்றிரண்டு
3. காப்பி (அல்) தேநீர் 6 அவுன்சு (3 அவுன்சு பாலில்)

இரவு 8 மணி: 1. கோதுமைச் சப்பாத்தி 2 (அல்) 3 அல்லது வேக வைத்த கோதுமை எந்த முறையில் வேண்டுமாயினும் - சிறிய அளவில்.
2 காய்கறிகள் 8 அவுன்சு
3. மீன் (அல்) இறைச்சி அல்லது பருப்பு 2 அவுன்சு
4. மோர் 1 டம்ளர் மட்டும்.

இதில் சைவம், அசைவம் இரண்டு வகையினருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதைவிடப் பெரிதாக வேறு என்ன வேண்டும் சாப்பிட? உடற்பயிற்சி:- உடற்பயிற்சி செய்வதால் பருத்தவர்கள் இளைக்க வாய்ப்புண்டு உடல் பருத்தவர்கள்தான், காலப்போக்கில் சர்க்கரை நோய் பெருகின்றார்கள். காலையும் மாலையும் தவறாமல் உடற்பயிற்சி செய்வதால் நோய் வராமல் தடுக்கவும், வந்து விட்டால் வளராமல் தடுக்கவும் முடியும்

இன்சுலின உணவும், உடற்பயிற்சியும் குறிப்பிட்டபடி இருந்தும், நீரில் சர்க்கரை இருந்தால் மருத்துவரின் அறிவுரைப் படி இன்சுலின் ஊசி போட்டுக் கொள்ள வேண்டும். இன்சுலின் ஊசி போட்டுக் கொள்வதால் மிதமிஞ்சி உண்ணவோ, உடல் ஊதுமளவு ஓய்வு கொள்ளவோ கூடாது.

மேற் சொன்ன முறையில் முயன்றால் சர்க்கரை நோய் வாழ்நாளை எந்த விதத்திலும் குறைக்காமல், நிறை வாழ்வு வாழலாம்.

## என் மனதில் ஒரு கேள்வி '?'

கூட்டம் நிறைந்த இடங்களான 'பஸ் ஸ்டாப்', 'ரயில்வே ஸ்டேஷன்', 'சினிமா தியேட்டர்' போன்ற இடங்களில் இளவயதுப் பெண்கள் வரும்போது 'லேடீஸ்...பஸ்ட், லேடீஸ் பஸ்ட்' என்று அலறும் இளைஞர்கள். வயதான பெண்கள் வரும்போது மட்டும் முண்டியடித்துக் கொண்டு முன்னால் செல்கிறார்கள்! அப்படியானால் 'லேடீஸ் பஸ்ட்' என்ற வார்த்தை இளம் பெண்களுக்கு மட்டும் தானா?

—பிரசன்னா—

www.thamizham.net - Free E Books No TM 14719

**GIVE US THE PLEASURE OF SERVING YOU
THE LARGEST AND MOST
COMPREHENSIVE RANGE OF
DIESEL PARTS UNDER ONE ROOF ! ! !**

***Service Departments :***

**Fuel Injection :** Calibration of Fuel Injection pumps reconditioning of injectors

**Electrical:** Electrical Starters, Dynamos, Magnetos and rewinding of Motors

**Mechanical Servicing of Indu**

**Engineering :** Strial Plant and Equipment

***Manufacturing Lines :***

"DVD" Fuel Injection Pipes

"DVD" Garbon Brushes

"DVD" Field Coils

"DVD" Governor Diaphragm.

"DVD" Nozzle Testers

"DVD" Fuel Injection Components

AGENTS

"PIONEER" 'O' RINGS, Olis Seals & Synthetic Packings
(A FENNER COCKILL PRODUCT)

# The Indian Engineering & Trading Company

(ESTABLISHED 1949)

***15, WALLERS ROAD, MADRAS***

TELEPHONE : 88761/88762

TELEGRAM : FUELPUMP

FACTORY :
VYASARPADI

BRANCHES
BANGALORE
HYDERABAD

www.thamizham.net - Free E Books No TM 14719

# "அறியாயோ....?"

**எழில்மாறன்**
பேராவூரணி

மான்கொடுத்த சீதனமாம்
மங்கையுன் விழிகளையும்
தேனூற்றின் சிறுகரையாம்
தெவிட்டாத இதழ்களையும்
வானுரையும் முகிலெனவே
வண்டாடும் கூந்தலையும்
நான்மறக்க இயலாதென்று
நங்கைநீ அறியாயோ?

எனைமயக்கும் புன்னகையை
இருகும்ப எழில்வடிவை
இணையற்ற பேரழகாம்
ஏற்றமிகு உன்னுருவை
துணைசேரச் சொல்லிவைத்த
தோகையுன் மொழிகளையும்
எனைமறக்கச் சொல்லுகின்றாய்
இயலாதென்று அறியாயோ?

எளிதாகக் காதல்தீயை
என்னெஞ்சில் மூட்டிவிட்டாய்
ஒலிக்காத இதயயாழில்
உணர்வுகளை மீட்டிவிட்டாய்
அழியாத சித்திரமாய்
அமைத்துவிட்ட பின்புஉன்னை
எளிதாக மறந்திடென்றால்
இயலாதென்று அறியாயோ?

அன்னைசொன்ன காரணத்தால்
அடுத்தவரை மணமுடிக்க
உன்மனதை மாற்றிக்கொண்டாய்
உணர்வுகளைக் கொன்று விட்டாய்?
உன்னினைவை மறந்துபின்பு
உயிர்வாழச் சொல்லுகின்றாய்!
பெண்ணணங்கே நீயின்றிப்
பேருலகம் சூனியமே!

www.thamizham.net - Free E Books No TM 14719

"உன்னிடம் ஒன்று கேட்கலாமா நளினா?" நளினாவின் பார்வை வியப்பும் கலக்கமுமாகக் குழம்பிற்று. குளிருக்காகவும், அழகு ஊட்டும் பாவனையாகவும், தலைமேல் இழுத்து மூடி இருந்த சேலையின் தலைப்பு நழுவித்தோள் மேல் விழுந்தது.


"கேளுங்களேன்"

"உனக்குப் பிடிக்கிறதா நளினா இதைப் போல நடிப்பதற்கு? இன்று படப்பிடிப்பில் நான் உன்னுடன் இருந்தேன். சிலசமயங்களில் அங்கிருந்து போய் விடவேண்

எல். லட்சுமி சுப்பிரமணியம்

இடத்தின் அழகை வண்ணத்தில் பிடிக்கத்தான் என்று நான் நினைத்தேன். ஆனால் அது உன் உடல் அழகை ஒளியும் வண்ணமும் ஏற்றிக் காட்டத்தான் என்று இப்போது புரிகிறது. இந்தக் கதையில் நான் இந்தச் சூழ் நிலையில், உன்னுடைய கதாபாத்தை நினைத்த விதமே வேறு இப்போது உன்னை அவர்கள் சித்தரிக்கும் விதமே வேறு. என்னால் இந்த ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை."

நிமிர்ந்து அவனைக்கண்டதும் அவள் விழிகள் விரிந்தன. மெல்லொளியில் அவன் கண்கள் ஈரம் கண்டன



டும் போலத் தோன்றியது எனக்கு. இன்று என்னைப்போலச் சிலர் பார்க்கக் கூசிய இந்தக் காட்சிகளை நாளை லட்சக்கணக்கான பேர் திரையில் காணப்போகிறார்கள் என்று நினைக்கும் போது—"

அவள் குரல் தாழ்ந்து காற்றின் சுழிப்பாய்க் கேட்டது- அது இரகசியமாக இல்லை. உணர்ச்சிகள் நொந்த நிலையில், சொற்கள் தடுக்கி இழுத்தபோது, தவிப்பில் அடங்கும் குரலாகவே தோன்றியது. நளினா அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்கவில்லை. அவள் மனதில் அவன் பேச்சு எழுப்பிய எதிரொலிகளை அவனால் கண்டுகொள்ள முடியவில்லை.

"நான் சொல்வது உனக்குப் பிடிக்கவில்லையா?"

"சொல்லுங்கள்-"

"என்னால் சொல்ல முடியவில்லை. இங்கே படம் பிடிக்க வந்தது, இந்த

அது அவன் அடைந்த ஏமாற்றத்தின் நிழலா? அல்லது அவளுக்குத் தோன்றிய பச்சாத்தாபமா? அதன் ஈரம் அவள் நெஞ்சை நனைக்கையில், அது சுட்டது.

"என்னால் உங்களுக்கு ஏமாற்றமா"?

"அப்படி இல்லை. ஆனால் நினைத்துப் பார்க்கப் போனால் அதுவும் ஒரு விதத்தில் உண்மை. அழகை இதயத்தில் வைத்து வணங்குவதுதான் நம் நாட்டுப் பண்பாடு. பெண்மையைப் போற்ற. பெண்ணையே தேவியாக வைத்து, அழகையும் அருளையும் மனம்அமிழ்ந்து நிற்கப் பூசிப்பதுதான் நம் வழக்கம். தூய்மைபொலியும் அந்த அழகு, பார்ப்பவர்கள்

## அத்தியாயம் 13

www.thamizham.net - Free E Books No TM 14719

கண்களில், உணரும் இதயத்தில் உயர்ந்து தான் நிற்கின்றும். ஆனால் இங்கே என்ன நடக்கிறது? உன்னுடைய அழகு பொலிவும் பார்ப்பவர்களைக் கூச வைக்கும் விதமாகத்தான் பயன்படுகிறது. பச்சை உணர்ச்சிகளைத் தூண்ட வைக்கும் கவர்ச்சியைத்தான் அழகென்று விரித்துக் காட்டுகிறார்கள்."

நளினி அசைவின்றி அமர்ந்திருந்தாள். எதிர்க் காற்றின் வீச்சில் அவள் தலைமயிர் அலைந்து கொண்டிருந்தது. உடம்பில் நூலும் பட்டும் கலந்த அரக்குப் புடவை நழுவும் துவளல். காதில் விண் சுடருக்குப் போட்டியாக மினு மினுத்த தோடு. அறிவும் அமைதியும் கலங்காத நிதானம் அவள் முகத்தில் அமைந்திருந்தன. முகம், கை, கால் எல்லாவற்றிலுமே அந்த நிதானம், கலக்க முடியாத நிதானம். வடிவமைந்து நின்றது.

"அப்படியானால் அந்தப் பண்புக்கு ஒவ்வாத விதமாய் நான் நடிப்பில் கலந்து கொள்வது தவறென்று சொல்லுகிறீர்களா சுந்தரம்?"

"ஆமாம்"

"அப்படியானால் நான் நடிப்பதை நிறுத்திவிட வேண்டியதுதான். எனக்கு எந்தவிதமான எதிர்காலமும் இல்லை என்று விட்டு விடவேண்டியதுதான்."

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"இன்று நடைமுறையில் அதுதான் உண்மை என்பதால் தான் கலைக்காக அதை ஒரு தொண்டாக நினைத்து நம்முடைய பண்பாடுகளுக்கு



www.thamizham.net - Free E Books No TM 14719

பெருகுதரும் வெளிச்சம் தெரியும்படி, படம் எடுக்க வேண்டுமென்கிற அக்கறை இன்று எவ்வளவு பேருக்கு இருக்கிறது? கவர்ச்சியையும், கண்ணைக் கட்டி நிறுத்தும் அழகையும் காட்டத்தான் இன்று போட்டி நடக்கிறது. உங்களிடம இன்று இப்படிப் பேச வேண்டி இருக்கிறதே என்று எனக்குக் கூச்சம் தான். ஆனால் அதுதான் உண்மை. அதற்கு உடன்பட்டு நடிக்க மறுப்பவர்களுக்கு இன்று இடம் இல்லை."

"இல்லை நளினா, உனக்குப் பெயர் இருக்கிறது. புகழ் இருக்கிறது. நீ மெல்ல மெல்லப் படியேறி மேலே வந்துவிட்டவள் அல்ல. நீயாவது பிடிவாதமாய் சில இலட்சியங்களைத் தூக்கிப் பிடித்து நிறுத்த முயன்று பார்க்கலாம். இத்தகைய இலட்சியங்களில், இது போன்ற உடைகளில், பகட்டாக நடிக்க நிச்சயம் மறுக்கலாம்."

"முடியாது சுந்தர். எல்லாத் தொழில்களையும் போல, இதிலும் லாபம் அடைவதுதான் முக்கிய நோக்கம். அதற்குப்படம் ஓடவேண்டும். மக்களைக் கவர வேண்டும். அதற்கு அவசியம் என்று அவர்கள் நினைப்பது எல்லாவற்றுக்கும் நான் உடன்படத்தான் வேண்டும். அப்போது தான் எனக்கும் மார்கெட் இருக்கும். நான் நடிக்க மறுக்கலாம். ஆனால் என் இடத்தை ஏற்று நடிக்கப் பலர் தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். மனத்தில் சங்கடமோ, கூச்சமோ இன்றித் தங்கள் அழகை விளக்கொளியில் வைக்கச் சித்தமாக இருக்கிறார்கள். ஆகையால் நான் முயன்றால் என்னைத்தான் விலக்கிக் கொள்ளலாம். அவற்காக வேறு எதுவுமே மாறாது; மாறமுடியாது."

"அப்படியானால் உன்னை மீட்டுக் கொள்ளவே உனக்கு மனம் இல்லையா நளினா?"

---

● "மற்றவர்களை அநியாயமாய் நடத்தாதீர்கள், நீங்களும் அநியாயமாய் நடத்தப்பட மாட்டீர்கள்".

—முகமது நபி

---

"மனம் இல்லை என்று நினைக்கிறீர்கள்? ஆனால் அதற்கு வாய்ப்பு யார் கொடுக்கிறார்கள்? உண்மையான கலைப் பணியில் ஈடுபட எனக்கு ஆசை இல்லை என்று சொல்கிறேன்? ஆனால் அதற்கு மதிப்புக்கொடுக்க முன் வருபவர்கள் இன்று எத்தனை பேர்? என்னைப் பற்றிய பேச்சு இருக்கட்டும். உங்களையே எடுத்துக் கொள்ளுங்கள். ஒருமுறை உங்கள் நிலையையே குனிந்து பார்த்துக்கொள்ளுங்கள்!"

சட்டென்று அவனை மடக்கி விட்டாள் அவள். உயிர் மீன் குஞ்சைப் போல, துள்ளித் துள்ளி எழுந்து, மீண்டும் மீண்டும் உடல் தட்டில் துடித்து விழுவது போன்ற, உணர்ச்சித் துடிப்பு அவள் கண்களிலும் இதழ்களின் அசைவிலும் பொலிந்தது.

"நீங்கள் அந்த நாட்களில் வைத்துக் கொண்டிருந்த இலட்சியங்கள் எங்கே? சுதந்திரமாய் நீங்கள் எழுதிய எழுத்துக்கள் எங்கே? கலைப் பணி என்று சொல்கிறீர்களே, அதுவே மூச்சாக நீங்கள் எழுதிய கதைகள், நாவல்கள் இப்போது எங்கே? மெல்ல மெல்ல நழுவி எவ்வளவு தூரம் வந்து விட்டீர்கள்? படிப்பவர்கள் இதைத்தான் விரும்புகிறார்கள் என்று சொல்வோர் பேச்சைக் கேட்டு, உங்கள் கற்பனைக்கும் எத்தனை மாற்று வடிவங்கள் கொடுத்துக் கொண்டே வந்து விட்டீர்கள்? நினைத்துப் பாருங்கள். இப்போது உங்களால் அந்த நாளில் எழுதியது போல் எழுத முடியுமா? கற்பனையாவது செய்ய முடியுமா? உங்கள் எழுத்தில்

www.thamizham.net - Free E Books No TM 14719

சிலையை விரிக்கிறீர்கள். இங்கே ...லையை விரிக்கிறார்கள். உங்கள் ...ற்சிக்குக் கலைப்போர்வை உண்டென்று சொன்னால், இவர்கள் முயற்சிக்கு, அதில் என்பங்குக்கு, அது இல்லை என்று நீங்கள் எப்படிச் சொல்கிறீர்கள்?"

சுந்தரம் சிலையாய் உட்கார்ந்திருந்தான், முகத்தெதிரே கண்ணாடி பிடித்தது போல இருந்தது அவள் பேச்சு. பூக்குடலைக் கவிழ்த்தது போல அவள் பேச்சில் மளமளவென்று சொரியும் விதமாகத் தோன்றியது. அவைகளை அதே வேகத்தில் ஏற்பதோ, மனத்தில் வாங்கிக்கொள்வதோ எளிதாக இல்லை. அந்த அதிர்ச்சி தெளியவே சில நிமிடங்கள் ஆயின.

"என்ன பதில் சொல்லவில்லை சுந்தரம்? என் மேல் வருத்தமா? நான் அதிகம் பேசிவிட்டேனா?"

"ஒன்றுமில்லை...ஒன்றுமில்லை."

"ஒன்றுமே இல்லை. அதுதான் உண்மை, நாம் இருவருமே. ஒன்றும் இல்லாத ஒரு சூனியத்தைப் பிடிக்கத்தான் கையை நீட்டிக்கொண்டு அலைகிறோம். நம்முடைய முயற்சியின் இலட்சியங்களை நாம் காற்றில் பறக்க விட்டு பல நாட்கள் ஆகிவிட்டன. இப்போது நாம் முயலுவதெல்லாம், மக்கள் நம் பெயரை நான்கு தடவை சொன்னால் எழும்பும் சப்தம் தரும் புகழ்தான். அந்தப் போலிக்காகத்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதை நம்பி வந்து விட்டது மட்டுமல்ல. இனி அது இல்லாமல் நாம் வாழவும் முடியாது. கலைப்பணியென்றும், இலக்கியத் தொண்டு, என்றும், பிறரை ஏமாற்ற நினைக்கலாம். ஆனால் இனி நம்மை ஏமாற்றிக் கொள்ள முடியாது. அது மட்டுமல்ல. மீட்டுக்கொள்ளவே முடியாதா? என்று கேட்டீர்கள். முடியாதுதான். புலிமேல் சவாரி செய்ய ஏறி உட்கார்ந்தாயிற்று. இனி நம்மால் இறங்க முடியாது. இறங்கினால் அழிந்து போகத் தயாராக இருக்க வேண்டும்."

அவள் சொன்னது எவ்வளவு பெரிய உண்மை; எவ்வளவு எளிதாக ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்றை அவள், அவன் முன் எடுத்துப் போட்டு விட்டாள்? நுனிப்புல் மேயும், ஆழ்ந்த உணர்ச்சிகள் இல்லாத, உள் மனத்தின் தெளிவு இல்லாத, பெண்ணாக இவளையா நினைத்தான்? எவ்வளவு பெரிய தவறு அது?

ஐந்து நிமிடங்கள் அமைதியாக கழிந்தன. நளினா எழுந்த வந்து அவன் அருகே உட்கார்ந்துகொண்டாள். அவள் கை அவன் தோளைப் பரிவுடன் அழுத்திற்று.

"யோசனைகளைக் கிளறி விட்டு விட்டேனா? எழுந்து வாருங்கள் போகலாம். நேரமாகிறது."

அவள் குரல் லேசாகித் தோன்றியது. அருவிச் சிரிப்பு காதருகே கேட்டது. எழுந்து நின்றான். ஆனால் நினைவுகளை உதறிக் கொள்ளமுடியவில்லை.

நிலவு வெண்மை பரப்பிய சாலை. குதிரைகள் பூட்டிய கோச்சு வண்டியில் விடுதிக்குச் செல்லும் போது பின்னால் மறைந்து வரவேண்டியிருந்ததால் ஏரியின் வெளிப் பரப்பும், நேரு பூங்காவின் வண்ண விளக்குகளின் கண்சிமிட்டலும்; நீர்மேல் மிதக்கும் படகு வீடுகளின் எழிற்

---

* மாணவர்களே! அரசியலை தெரிந்து கொள்ளுங்கள். ஆனால் அரசியலில் ஈடுபடாதீர்கள்.

—பெங்களூர் இரவி.

www.thamizham.net - Free.E Books No TM 14719

தோகைகளும், கண்ணுக்கு ரம்மியமாக இருந்தன.

சட்டென்று அவன் கையைப் பிடித்துக் கொண்டாள் நளினி. அதன் குளிர்ச்சியிலும் மென்மையிலும் அவன் முதுகில் ஒரு சிலிர்ப்பு ஓடிற்று. அந்த மெல்லிருளில் ஆழ்ந்து நோக்கிப் புன்னகை புரியும் கண்கள் அவன் மனத்தின் அதிர்ச்சியை மென்மைப் படுத்துவது போல ஆறுதலாக இதழ் விரிந்து தெரியும் பற்களின் வெண்மை. இறங்கும் வரை நளினி கையைப் பிரித்து விலகிக் கொள்ளவே இல்லை. கோபமும் வீம்புமாய் சாப்பிடாமல் மூலையில் தூங்கிப் போய் விட்ட குழந்தையைச் சமாதானம் படுத்துவது போல் இருந்தது அது.

பால் மட்டும் அருந்தி விட்டு அவன் தன் அறைக்குப் போய் விட்டான். அந்த விடுதியில் மாடியில் தனியான அறை நளினுக்கு. பிரிந்து போகுமுன் கையை உயர்த்தி அசைத்து, தலையைச் சற்றுச் சாய்த்து ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டு, அவள் படிகளில் ஏறிப் போய் விட்டாள்.

மாடிப்படிகளில் அவள் பாதங்கள் தாளமிடுவது போல அழுந்துவது கேட்டது. கொப்பரைக் கயிற்றில் புனைந்த விரிப்பில் அவள் கால் மெட்டி குலுங்க அறைக்குச் செல்வது காதில் ஒலித்தது. தன் அறையில் நடந்து கதவை மூடிக்கொள்ளும் சப்தம் கேட்டது. அவன் தனி; வறட்சியும், வறுமையும் சூனியமுமாய் ஒரு உணர்ச்சி முள்ளாய்க் குத்திற்று.

உள் மனத்தில் ஒரு குரல் ஒலித்தது. "நான் எங்கு சென்று கொண்டிருக்கிறேன்? எதைத் தேடிப் போய்க் கொண்டிருக்கிறேன்?"

பஞ்சனை தைத்த நாற்காலியில் உட்கார முடியவில்லை. ரப்பர் மெத்தை விரித்த கட்டிலில் முடியவில்லை. மேஜை விளக்கின் அடியில் தோற்பை மினுமினுத்தது. அதன் உள் உறையில் நோட்டுக் கற்றைகள் இருக்கும். அவனுடைய எழுத்துக் கூலி. நல்லை தன் ஆற்றலை தன் மனச்சாட்சியை, அடகு வைத்துச்சேர்த்த பணம்.

"ம்" என்று ஒரு வேதனையில், தன்னை அறியாமல் இரைந்து முனகினான் சுந்தரம். புரையோடிய மனம்; வலிதாங்காமல் பிறர் கேட்கும் படியாக முனகிற்று. நல்ல வேளை; யாரும் அருகில் இல்லை.

கைக்குட்டையை எடுத்துக் கண்களை இறுக்கி மூடிக் கட்டிக் கொண்டான். கட்டிலில் படுத்துத் தலையணையால் காதுகளை மூடிக் கொண்டான். இருள் கிணற்றில் இறங்கி அமிழ்வது போல இருந்தது. தூக்கம் அலைகளில் முழுவதும் நனையக் குளிக்காமல், அந்தக் குளிர்ச்சி மட்டும் தெரிவது போன்ற மனநிலை.

காதருகே அந்தச் சிரிப்பொலி கேட்டது. நளினி அவன் முன் வந்து நின்றாள்,

"நான் தீர்மானம் செய்து விட்டேன் நளினி."

"என்னவாம் அது?"

"நான் சம்பாதித்தது எல்லாவற்றையும் போட்டு, ஒரு படம், என் இலட்சியங்களுக்காக ஒரு படம், எடுப்பதென்று உறுதி கொண்டு விட்டேன்."

---

❀ "ஒருவன் நிலை அவன் கொண்ட உறவையும், பெற்ற நண்பர்களின் சூழ்நிலையையும் பொறுத்தது"

—இ. துரைசாமி

---

www.thamizham.net - Free E Books No TM 14719

## கதவுகள் இல்லே, சத்தம் வெளிவராது!

ஹம்பர்க் விமான நிலையத்தில், ஜெட் விமான எஞ்சின்களை இயக்கி சோதனை செய்வதற்கு 22.5 லட்சம் செலவில் ஓர் அதிசய கட்டிடம் கட்டியிருக்கிருர்கள். இக்கட்டிடத்தில் கதவுகள் இல்லே. எனினும் சத்தம் கொஞ்சம் கூட வெளி வருவதில்லே. எப்படி? சுவர்களும், மூலைகளும் சத்தத்தை ஈர்த்து விழுங்கக் கூடிய வகையில் புது விதமான பொருளைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கின்றது.

---

"நீங்களே கதை, வசனம், டைரக்ஷன்?"

'கல கல' வென்று சிரித்தாள் அவள். அவன் நெற்றியில் முத்திட்ட வியர்வையைத் துவண்டு விழும் பட்டு முந்தானையால் ஒற்றித் துடைத்தாள் அவள். அவன் உடல் அந்தக் கைபட்டு நடுங்கிற்று. தலையை ஒயிலாகச் சாய்த்துப் பார்த்தாள். மூக்கில் ஒரு வைரப் பொட்டு நீலமாக இறைத்தது.

"உங்க ஆசையை நான் கெடுக்க வில்லே. நானே கதாநாயகியாக நடிக்கட்டுமா?"

"நடிப்பாயா நளினு?"

"ஓ" என்று கைவிரல்களைத் தாமரைப் பூவாய்க் குவித்துக் கொண்டாள் அவள். "நான் அந்த உதவியைச் செய்யா விட்டால், வேறு யார் செய்வார்கள்? எனக்கு நீங்கள் நடிக்கப் பணம் கூடத் தர வேண்டாம். ராஜ்கபூர் ஏதோ ஒரு படத்துக்கு ஒரு ரூபாய் வாங்கிக்கிட்டாராமே! அதைப் போல ஒரே ஒரு ரூபாய் கொடுங்க போதும். ஆனல்"

"என்ன ஆனல்?"

"மற்ற விதத்தாலே, உங்க பணத்தை ஜாக்கிரதையாகப் பார்த்துக்குங்க. உங்க படம், உங்க இலட்சியப் பசியை அணைக்கும். ஆனல் உங்க பசிக்குச் சோறு போடாது. அதை வாங்க டிஸ்டிரிபியூட்டருங்க வர மாட்டாங்க. திரையிடத் தியேட்டர் கிடைக்காது. திரையிட்டாலும் பார்க்க உங்க ரசிகர்கள் வரமாட்டாங்க. நளினுவிடம் அவர்கள் எதிர்பார்ப்பது உங்க கதையிலே அவர்கள் படித்துப் பழகியது, இதிலே கிடைக்காதுன்னு தெரிஞ்சு போனு. தியேட்டர் காலியாகத் தான் இருக்கும்."

சட்டென்று விழுந்த அவன் முகத்தை ஆதரவோடு நிமிர்த்தினுள் அவள். "ஏதுக்கு உங்களுக்கு இந்த ஆசையெல்லாம்? பிழைக்கிற வழியை மட்டும் பார்த்தால் போதாதா?"

"நளினு!" என்று கையை நீட்டித் துழாவினுன் சுந்தரம். அவள் நின்ற இடம் காலியாக இருந்தது. அத்தனையும் கனவு. அவ்வளவுதானு?

ஆனல் நெஞ்சில் துடிப்பு இன்னும் குதிரைக் குளம்படியாய் அடித்துக்கொண்டிருந்தது. அந்த அதிர்ச்சியும், பயமும் நீங்கவில்லே. அவன் மனப்படலத்தில் எழுந்த சித்திரம் இன்னும் விரிந்து கொண்டேதான் போயிற்று. கண்களை மூடிக் கொண்டான்.

அவன் இலட்சியக் கனவுகளின் நினைவுருவாய் எடுத்த அந்தத் திரைப் படம். அது மூன்று நாட்களுக்குமேல் ஓடவில்லே. இரண்

www.thamizham.net - Free E Books No TM 14719

வாரங்களுக்கு பதிவாகி இருந்த அந்தப் படத்தை எடுத்து விட்டு மற்ற நாட்களுக்குப் பழைய படம் ஒன்றைப் போட்டு ஓட்டுகிறார்கள். பார்த்துப் புளித்துப் போன பழைய படம். அதற்கு கூட அவனுடைய புதுப் படத்தை காட்டிலும் கூட்டம் அதிகமாக இருந்தது......

பாங்குக் கணக்கில் மீதம் இல்லை. வீட்டை விற்றாயிற்று. கடன் கொடுத்த சேட்டின் கீழுதடு அர்த்தமாய் பிதுங்குகிறது. கோர்ட்டில் கேஸ் காத்துக்கொண்டிருக்கிறது. ஏமாற்றமும் வேதனையும் நெஞ்சைப் பிழிகின்றன. மூலைக்கு ஒருவராய் நண்பர்களாய் நேற்று வரை இருந்தவர்கள், கையை நீட்டிக் கேலி செய்வது தெரிகிறது...

கண்ணை விழித்து எழுந்தான். படுக்கையிருந்து கீழே குதித்து நின்றான். மார்பு இரைத்தது. மூச்சுத் தடுமாறிற்று.

அறையைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தான். விடுதியின் பின்புறம் கொள்ளையாய் பூத்துச் சொரிந்த தோட்டம். குடை நிழல் விரித்த பெரிய மரம். அதன் கீழ் ஒரு பெரிய கருங்கல்லை உட்காரும் ஆசனமாய்ச் செதுக்கி வைத்திருந்தார்கள். அதன் மீது உட்கார்ந்து கொண்டான். அவன் பார்வை நிமிர்ந்தது.. நளினாவின் அறையில் விளக்கு எரிந்தது. ஜன்னல் திரையில் உட்கார்ந்திருந்த உருவக் கோடுகள் விழுந்தன. அவளுக்கும் தூக்கம் வரவில்லையா?

(வளரும்)

---

மதிப்புரை : விலை 1-50

# பேபி லீமா

சிறு குழந்தையின் உள்ளுணர்வை அப்படியே படம் பிடித்து காட்டுவது போல் அமைந்திருக்கிறது இந்தக்கதை.

காதல், தோல்வி, திருமணம் என்று ஒரே பாதையில் சென்று சலித்து விட்ட வாசகர்களுக்கு இந்தக் கதை மாற்றம் தரும் வகையில் அமைந்துள்ளது. குழந்தைகளின் 'சைகாலஜி'யை அடிப்படையாக வைத்து எழுதியவர் அவர்களின் உரையாடல்களிலும் அதேத் தன்மையை கொண்டு வந்திருக்கலாம்.

இளம் எழுத்தாளரான எஸ். ஏ. ரெமோ அவர்களின் முயற்சிக்குப் பாராட்டுக்கள்.

நல்ல கதைகளைப் படிப்பவர்களுக் இது ஒரு சிறந்த பரிசு.

(சிங்காரி பதிப்பகம் 10/3 சங்கரப்பத்தன் தெரு, சென்னை-12.)

www.thamizham.net - Free E Books No TM 14719

நாளையை சந்திக்கப் போகிறவர்கள் இன்றையப் பிரச்சினைகளுக்கிடையில் வாழ்ந்து கொண்டிருக்கும் மாணவர்கள். நாளையை தயார் செய்ய இன்று

# மாணவர் பங்கு என்ன?

—இதில் 'அரசியல் சாக்கடையானல் இந்த நாட்டுக்கு அரசியலேன்' என்று கேட்கிறார்.

இளங்கோ. ஆ. இரா.
பெரியார் கல்லூரி, திருச்சி.

மாணவர்கள் இன்று ஒரு தலைவலியெனக் கருதப்படும் நிலை நாடுகள் தோறும் தோன்றி விட்டது. மாணவர்கள் அதிருப்தி அடைந்து விட்டனர் என்று ஒருவர் கூறுகின்றார். மாணவர்களைத் திருத்த முடியாது என்று ஒருவர் சலித்துக் கொள்கின்றார். மாணவர்கள் என்ற பெயரைக் கேட்டவுடன் பொங்கி எழுகின்றார் மற்றொருவர். இத்தனையும் மேலை நாடுகளில் தான். நமது நாட்டில் மாணவர் பிரச்சினை தலைக்கு மீறவிட்டாலும் பிரச்சினைக்கான முளை தோன்றி விட்டது என்பதை மறுக்க முடியாது. இந்நிலையில் இந்த நாட்டில். இந்த சமுதாயத்தில் மாணவர்களின் பங்கு என்ன?

பொறுப்பற்றதனமாய் வருகின்ற கொள்கைகள், திட்டங்கள் இவற்றின் பலன் நாளை அவர்கள் தோளையே அழுத்தப் போகின்றது. இதைப் பெரியவர்கள் உணரவில்லை. ஆனால் நாம் - இளைஞர்கள் - மாணவர்கள் உணர்கின்றோம். உணர்ந்து கேட்டுக் கொள்கிறோம் மாணவர்களின் பங்கு என்ன?

அரசியல் ஆகாதது; பொருளாதாரம் புரியாதது; சீர்திருத்தம் சின்னவர்கள் சொல்வதைக் கேளாதது, எதிலுமே நமக்குப் பங்கில்லை ஆனால் அரசியல் வாதிகள் பிதற்றுகின்றார்கள்: 'நாளைய மன்னர்கள் நீங்கள்' நாம் நம்பிக் கொண்டிருக்கின்றோம்.

நாட்டின் பொருளாதாரமே. சமுதாய வளர்ச்சியின் ஆணிவேர் போன்றது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி ஐந்தாண்டு திட்டங்களை நம்பியுள்ளது. இந்தத் திட்டங்களில் மாணவர் பங்கு என்ன? கல்லூரிகளில் மாணவர் திட்ட அரங்கு என்ற ஒன்றின் மூலம் விவாதிப்பதாகப் பெயர் பண்ணுவதே தொடர்பாக உள்ளது. மாணவர்களின் கருத்துகளுக்கு செவிசாய்க்கப்படுவதில்லை. இதற்கு பெயர் திட்டங்களில் மாணவர் பங்கு!

என்றைக்கோ இந்த சமுதாயத்தில் வாழ்ந்த எவரோ சிலரால், எங்கோ இருந்து கொண்டு வகுக்கப்படுகின்ற கொள்கைகளை - ஏன்-எதற்கு என்று தெரியாமல் இளைஞர்கள்

---

**காதல் என்பது விசித்திரமானது காதல் செய்பவன் தன் வாழ்வில் பெரிய ஏமாற்றத்தையே காண்கிறான்.**

—இ. துரைசாமி

---

www.thamizham.net - Free E Books No TM 14719

நிறைவேற்ற வேண்டும்; இன்றைய அரசியல் வாதிகள் அன்றைய சமுதாயச் சூழலில் வாழ்ந்த போது இருந்த பிரச்சினைகளுக்கும் இன்றிருக்கும் பிரச்சினைகளுக்கும் எவ்வளவு வேறுபாடுகள் உள்ளன? இன்று எத்தனை அரசியல் தலைவர்கள் - அமைச்சர்கள் சமுதாயத்துக்கு நடுவில் வாழ்ந்து வருகின்றனர்? இதையெல்லாம் ஏன் நாம் சிந்திப்பது இல்லை?

அரசியல்வாதிகளும். சில மாணவ நண்பர்களும். சொல்லிவிடுகிறார்கள் 'அரசியல் ஒரு சாக்கடை'. அரசியல் சாக்கடையானால் இந்த நாட்டுக்கு அரசியல் ஏன்? சாக்கடையான அரசியலில் இருந்து தோன்றி வளர்ந்து ஆட்சியைப் பிடித்து வகுக்கப்படுகின்ற கொள்கைகள் மட்டும் சாக்கடைத்தனமாக இருக்காதா? அந்த சாக்கடைத்தனத்தை மாற்றாது அடிபணிவது துரோகச் செயல் அல்லவா? தற்கொலைக்கு ஒப்பல்லவா? பேசிக் கொண்டிருப்பதற்குப் பெயர் பங்கல்ல- பொழுது போக்கு. விவாதிப்பதற்குப் பெயர் பங்கல்ல- கருத்துப் பரிமாற்றம். எனவே பங்கு என்பதற்கு வேறு பொருள் உண்டு. குறையைப் போக்காமல் நிறைவைக் காண முடியாது. எனவே குறையுள்ளது என்று ஒன்றையும் ஒதுக்காது, எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளுங்கள். அரசியலில் பங்கு கொள்ள ஒரு அரசியற் கட்சியை நாடுவது ஒன்றுதான் முடிவான வழியல்ல. ஆகவே உங்களுக்கான- மாணவர்க்கான- இளைஞர்க்கான வழியைத் தேர்ந்தெடுங்கள்.

மாணவர்கள் பச்சைப் பாலகர்கள் அல்ல. பட்டப்படிப்பினை மேற்கொண்டுள்ள மாணவர்கள் வாக்குரிமைக்கு உரிய வயதுடையவர்கள் என்பதை நினைவு கூறுங்கள். உங்கள் வாக்குகளைப் பயன்படுத்துங்கள். அதன் மூலமே உண்மையான பங்கைப் பெற முடியும். அஃதின்றி இன்று. மாணவர் பங்கு என்பதெல்லாம் வெறும் கானல்நீர் - அப்பட்டமான பித்தலாட்டம்.

நமது உழைப்பின்றி எதுவும் இங்கு நடைபெற்று விடமுடியாது என்பதை உணருங்கள். நாளைய இந்தியா இளைஞர்களிடம் தான் இருக்கிறது என்றால் இன்றைய திட்டங்களில்- கொள்கைகளில் உண்மையான பங்கு மாணவர்களுக்கு இளைஞர்களுக்கு இருக்க வேண்டும் என்பதை உணருங்கள்.

இன்றைய மாணவர் பங்கின் நிலையைச் சொல்லி விட்டேன். உண்மை பங்கைப்பற்றி சிந்திப்பது உங்கள் பொறுப்பு. ✽

## அட்டைப்பட வாத்தே!

**உன்னால் முட்டைகளை உருவாக்கத்தான் முடியும். அதற்கு உயிர் கொடுக்க முடியாது.**

**அரசியல்வாதிகளே!**

**உங்களால் மாணவர்களை கெடுக்கத்தான் முடியும். அவர்களுக்கு வாழ்வளிக்க முடியாது.**

'ரீத்தா'

பதிப்பாளரும் ஆசிரியரும்: சு. இராசேந்திரன், எம்.ஏ., 19, நௌரோசி வீதி சென்னை-31. அச்சிடுபவர்: பி. வி. ராமச்சந்திரன், ஸ்ரீ பண்டாரி பிரஸ் 26, பிராடவே, சென்னை-1.

www.thamizham.net - Free E Books No TM 14719

*THE ONLY*

SYNTHETIC GEM FACTORY

In the whole of Asia

# THE INDO-SWISS SYNTHETIC GEM MANUFACTURING COMPANY Limited

11/326 Main Road, Mettupalayam
Coimbatore District

Grams :
INDO-SWISS,

Phone :
Office : 136
Factory : 127

Sole Distributors :

*G. S. AND COMPANY*

6, Joffersha Street, TRICHY-8

AND

RASTHA GOPALJI
JIAPUR


www.thamizham.net - Free E Books No TM 14719


# Fight the invisible germs that do harm to your teeth...stop them everyday with

## Epic TOOTH PASTE

EPIC is kind to the enamel of your teeth and your gums. It's minty, it's sweet, has just the right foam you need. Go for wholesome mouthcare. Start EPIC today.

**Available in three sizes: LARGE, GIANT & ECONOMY.**






Epic the first toothpaste in India to use colourless, odourless germ-killing HEXACHOLOROPHENE.

Also available: Epic TOOTHPOWDER in two sizes.

Epic NYLON TOOTH BRUSH, scientifically designed with colourful handles.

***For complete, lasting dental hygiene***

ORIENT PHARMA PRIVATE LTD., MADRAS 43.


www.thamizham.net - Free E Books No TM 14719